www.tamilarangam.net


# களத்தில்

பெண் விடுதலை என்பது அரச அடக்கு முறைகளிலிருந்தும் சமூக ஒடுக்குமுறைகளிலிருந்தும் பொருளாதாரச் சுரண்டல் முறைகளிலிருந்தும் விடுதலை பெறுவதாகும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (11.03.1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (156) அன்பளிப்பு: 60 p


## - கடற்புலிகளினது வரலாற்றுச் சாதனை -

# கடற்படையின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே கடற்படைக்குப் பலத்த அடி

✳ இரு கப்பல்களும் இரு டாங்கிகளும் மூழ்கின ✳ ஐம்பதுக்கு மேற்பட்ட படையினர் பலி

✳ பதினொரு கரும்புலிகள் வீரச்சாவு

ஏழு பீரங்கிப் படகுகள் புடைசூழ, திருகோண மலையிலிருந்து பல நூற்றுக் கணக்கான படையினருடனும் ஆயுதங்களுடனும் யுத்தத் டாங்கிகளுடனும் 22-02-98 அன்று காலை 8.00 மணிக்குப் புறப்பட்ட மூன்று கப்பல்களைக் கொண்ட சிறீலங்கா கப்பல் தொடரணி மீது, காங்கேசன்துறை – பருத்தித் துறை கடற்பரப்பில் வைத்து இரவு 7.15 மணியளவில் கடற்புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். அதிகாலை 2.00 மணிவரை தொடர்ந்த தாக்குதல் விடுதலைப் புலிக ளுக்கு பலத்த வெற்றிகளைத் தேடிக் கொடுத்தது.

இரவு எட்டு மணியளவில் பருத்தித்துறைக் கடலில் கரையிலிருந்து பத்து மைல் தூரத்தில் வைத்து முதலாவது கடற்கரும்புலிப் படகின் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் முப்பது பேருடன் சென்று கொண்டிருந்த 'வலம்புரி' என்ற இராணுவச் சரக்குக் கப்பல் முற்றாக வெடித்து தீப்பற்றி எரிந்து மூழ்கியது.

இதனையடுத்து, தாக்குதல் வலயத்தில் இருந்து விலகி காங்கேசன்துறையை நோக்கி ஓடத்தொடங்கிய கப்பலணியைத் துரத்திச் சென்ற கடற் புலிகள்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## சிக்குண்ட நிலையில் சிறீலங்கா இராணுவம்
## மாங்குளம் சந்தியை கைப்பற்றும் முயற்சி முறியடிப்பு

பாதை திறக்கவெனப் புறப் பட்ட சிங்களப் படைகள் விடுதலைப் புலிகளின் பிடிக்குள் சிக்குண்டு படாதபாடு படு கின்றன. இருந்தபோதிலும், இவ் இராணுவத்தினரின் நிலை நாளுக்கு நாள் மோசம் அடை ந்து வருவதைப் பற்றி எவ்வித அக்கறையும் அற்ற சந்திரிகா பண்டாரநாயக்காவும் அவரின் மாமன் அனுருத்த ரத்வத்த வும் தமது அரசியல் பகற் கனவுகளுக்கு வடிவம் கொடு க்கவென, இந்த ஜெயசிக்குறுய் இராணுவத்தினரை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதே சங்கள் நோக்கி காலத்துக்குக் காலம் நகர வைத்து பெரும் இழப்புகளுடன் பின்வாங்கும் பரிதாப நிலைக்கு ஆளாக்கி வருகின்றனர்.

இந்த வரிசையில் கடந்த மாத இறுதியில் முத்திசைகளிலிரு ந்தும் மாங்குளம் சந்தியைப் பிடிக்க எடுக்கப்பட்ட முயற்சி ஐம்பதுக்கும் மேற்பட்ட இரா ணுவத்தினரைப் பறிகொடுத்த நிலையில் முறிவடைந்துள்ளது.

ஆனாலும் இம் மாதம் பிறந்தது முதல் மீண்டும் கடுமையான எறிகணை வீச்சுக்களையும், குண்டு வீச்சுக்களையும் மாங்குளம் நோக்கி படைகள் ஆரம்பித்து ள்ளன. இந்த ஆக்கிரமிப்பு முயற்சியின் முக்கிய அம்சமாக மாங்குளத்தைச் சுற்றிலும் உள்ள வீதிகளை அடுத்துள்ள காடுகள் படைகளால் எரித்து அழிக்கப்பட்டு வருகிறது. மாங்குளத்தை நோக்கிய

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## மகளைக் காணாது ஏங்கிய தாய் மரணம்
## மாணவியைக் கொன்ற இராணுவத்தினன் விடுதலை

கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயத்தில் கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்பில் படித்துக் கொண்டி ருந்த மாணவி ஆறுமுகம் சிவாஜினி 1996ஆம் ஆண்டு நடுப்பகுதியில் சிறீலங்கா இரா ணுவத்தினரால் கைதாக்கப் பட்டார். இன்று வரை அவர் எங்கே எப்படி வைக்கப்பட்டு ள்ளார் என்ற விடயத்தை சந்திரிகாவின் பாதுகாப்புப் படையினர் வெளியிடவில்லை. இதனால் சிவாஜினியின் ஐம்பது வயதுத் தாயார் ஆறுமுகம் தவமணி, மகளின் நினைவால்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## சதாசகாய மாதா ஆலயத்தையும் சிறிலங்கா குண்டு வீசி அழித்தது

சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படையினர் தமிழ்ப் பொது மக்கள் ஒன்று கூடும் பொது இடங்கள் மீது குண்டு வீச்சுக்களையும் எறிகணை வீச்சுக்களையும் நடாத்தி வருவது உலகறிந்த விடயம்.

அதிலும் குறிப்பாக ஆலயங்கள் தமிழ்ப் பொது மக்கள் குண்டுவீச்சுக்களுக்கும் எறி கணை வீச்சுக்களுக்கும் அஞ்சி ஒதுங்கும் இடம் என்பது சிறீலங்காப் படையினர்க்கு நன்கு தெரிந்த ஒன்று. இதனால் தமிழ் மக்களை இனஅழிப்பு செய்யத் துடிக்கும் சிங்களப் படைகள் ஆலயங்கள் மீது திட்டமிட்ட குண்டுவீச்சுக்களை நடாத்தி வருவது நீண்டகால வரலாறு. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் என எத்த னையோ நூற்றுக்கணக்கான கோவில்களும் யாழ்ப்பாண சந்தியோமையர் ஆலயம், நவாலி

தொடர்ச்சி 2 ம் பக்கம்...



## இருள் விலகி.....

மறைந்தது ஒரு பொழுது
மெல்ல இருள் விலகி
செல்லும் பாதை தெளிவுடன்
காலிற் கணீரென்றொலித்த
சிலம்புகளை உதறிவீட்டு
ஒலிக்கின்ற முரசினை நோக்கி
எம் பாதங்கள் அகலப் பதியும்.
அதில் வெல்லுகின்ற சேதி
தெரியும்.

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net



# தமிழரின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு மட்டுமல்ல சுதந்திரமான பார்வைக்கும் சிறீலங்கா அரசு தடை

இலங்கையில் இன்று தமிழ் மக்கள் எங்கெங்கெல்லாம் நடமாடலாம், எங்கெங்கெல்லாம் நடமாடக் கூடாது என்பதற்கு நீண்டதொரு பட்டியலே உள்ளது. இதில் சிறீலங்காவில் உள்ள அரசியல், இராணுவக் கேந்திர நிலையங்கள், பொருளாதார மையங்கள் என்பன உள்ளடங்கிய எண்ணிக்கையில் நீண்டதொரு பட்டியலை வெளியிட முடியும். சந்திரிகா அரசு, இலங்கையில் தமிழ் மக்களும் சம உரிமை பெற்றவர்களாக முழு அந்தஸ்துடன் வாழ்கின்றனர் எனக் கூறிக் கொள்கின்றது. ஆனால், தமிழர்களை சம அந்தஸ்து உள்ள பிரசைகள் போல் அது என்றுமே நடத்துவது இல்லை. இதனால் அநேக தமிழ் மக்கள் சிறீலங்கா அரசின் கேந்திர நிலையங்கள் உள்ள பகுதிகளுக்குச் செல்வதை பெருமளவு தவிர்த்தே வந்துள்ளனர். ஏனெனில், இது வம்பை விலை கொடுத்து வாங்குவதற்குச் சமனாக முடியும் என்பதே அவர்கள் அபிப்பிராயமாகும்.

ஆனால், காங்கேசன்துறை – பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் தொடர்பாக, திருமலையில் பெண் ணொருவர் கைதாகி இருப்பது தமிழ் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு மட்டுமல்ல, சுதந்திரமான பார்வைக்கும் சிறீலங்கா அரசினால் விதிக்கப்பட்ட தடையாகவே கருதப்படுகின்றது.

ஏனெனில், கடற்படையில் பணியாற்றிய இப் பெண்மணி கைது செய்யப்பட்டமைக்கு, அவர் கடற்படை தொடரணிப் பயணத்தை ஆரம்பித்தபோது அதனை வீட்டு யன்னல் ஊடாகப் பார்த்தார் என்பதே காரணமாகும். அதாவது, ஒரு தொடரணி புறப்பட்டதை அவதானித்து விடுதலைப் புலிகளுக்குத் தகவல் கொடுத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது இடம்பெற்றுள்ளது.

சிறீலங்காப் படையினரால் அப்பாவித் தமிழ் மக்கள் கைது செய்யப்படுவதும்,

> காங்கேசன்துறை – பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் தொடர்பாக, திருமலையில் பெண்ணொருவர் கைதாகி இருப்பது தமிழ் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு மட்டுமல்ல, சுதந்திரமான பார்வைக்கும் சிறிலங்கா அரசினால் விதிக்கப்பட்ட தடையாகவே கருதப்படுகின்றது.

சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதும் சாதாரணமான ஒரு விடயமே. ஏனெனில், கைதுக்கான வலுவான காரணம் எவையும் அவசியமானதல்ல. காரணம் எவையும் வலுவாக இல்லாத பட்சத்தில், விடுதலைப் புலிகளைக் காட்டிக் கொடுக்கத் தவறினார் என நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

ஆனால் தற்பொழுது, கப்பல் படை தொடரணி புறப்பட்டதைப் பார்த்தார் என பெண்மணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையானது, முன்னைய நிலையைவிட சூழ்நிலை மோச மடைந்துள்ளதன் வெளிப்பாடேயாகும். ஏனெனில், கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள வீட்டில் கடற்பரப்பை நோக்கியவாறு யன்னல்கள் அமைப்பதும், அதனூடாக கடலின் அழகிய காட்சியை ரசிப்பதும், கடலில் இருந்து இதமான காற்றை அனுபவிப்பதும் எவருமே விரும்பும் ஒன்றாகும்.

இவ்வாறாகவே, அப் பெண்மணியும் கடலைப் பார்த்துக் கொண்டிருக்கையில், அதில் சென்ற கடற்படைத் தொடரணி காட்சியைக் கண்டமை தவறாகப் போயுள்ளது. இது அப் பெண்மணியை புலிகளின் உளவாளி எனவும் தாக்குதலுக்கு தகவல் வழங்கியவர் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணை என்ற ரீதியில் சித்திரவதைக்கு உள்ளாகவும், சிறைச்சாலையில் அடைக்கக்கூடிய இயலுமான சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது.

இந்த ரீதியில், இன்று இலங்கையில் தமிழ் மக்கள் எங்கு போகலாம், எங்கு வரலாம் என்பதற்கு மட்டுமல்ல – எதைப் பார்க்கலாம் – எதைப் பார்க்கக் கூடாது என்பது கூட வரையறுக் கப்பட்டு விட்டதொன்றாகவே மாறியுள்ளது. இதனால் வீட்டினுள் இருக்கும்போது கூட வீட்டு யன்னல்களையும் கதவுகளையும் இறுக மூடிவிட்டு இருக்கும் வகையில் தமிழ் மக்கள் மீது நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இத்தனைக்கும் சந்திரிகா அரசோ தமிழ் மக்களுக்கு சம உரிமைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் சுதந்திரமான வாழ்வு வாழ்வதாகவும் உலகில் பிரச்சாரம் செய்து வருகின்றது. அதற்கு ஏற்றாற்போல் கூட்டணி போன்ற தமிழ் குழுக்களும் தமிழருக்கு அரசியல் உரிமைகள் கிடைக்கப்பட்டு விட்டன – பொருளாதார உரிமைகள்தான் கிடைக்க வேண்டியுள்ளன என்று பேசியும் வருகின்றனர்.

சுதந்திரமாக நடமாடவும் தாம் விரும்பிய திசையில் பார்ப்பதற்குமே சுதந்திரமற்றுத் தமிழ் மக்கள் இருக்கையில், இதுதான் தமிழருக்கான சம உரிமையும் – அரசியல் உரிமையும் என்று சந்திரிகா அரசு பேசுவது, அதன் பேரினவாத சிந்தனைக்கு சரியாக இருக்கலாம். ஆனால், கூட்டணி மற்றும் தமிழ்க் குழுக்களுக்கு இது எவ்வாறு சம உரிமையாகவும், சம அந்தஸ்தாகவும் உள்ளதென்பதே வேடிக்கையானது. ✳

## மகளைக் காணாது ஏங்கிய .....

வாடிவதங்கி உண்ணாது உறங்காது தவியாய்த் தவித்து மன நோயாளியாகி இறுதியில் கடந்த வாரம் மகளின் நினைவோடு மரணமெய்திய துயர சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஒரு பெண்ணும், இரு பிள்ளைகளின் தாயுமான சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியில் தமிழ்த் தாய்மாரும் தமிழ்ப் பெண்களும் இனவதைக்கு உள்ளாக்கப்பட்டு சாகடிக்கப்பட்டுக் கொண்டிருப்பதற்கு ஆறுமுகம் தவமணியின் பரிதாப மரணம் சிறந்த சான்றாக உள்ளது.

இதற்கிடையில் 1996ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை எழுதவெனச் சென்று கொண்டிருந்த பள்ளி மாணவி கனகநாதன் ஆனந்தியை பவள் பவச வாகனத்தால் மோதிக் கொன்ற சிறீலங்கா பவள் கவச வாகன இராணுவச் சாரதி எதுவித தண்டனையும் இன்றி சிறீலங்கா நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார். குற்றச்சாட்டை நிரூபிக்க போதிய சான்றுகள் இல்லை எனச் சாட்டுக் கூறப்பட்டுள்ளது.

இந்த மாணவியின் மரணச்சடங்கில் பங்கு பற்றிவிட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே கிருசாந்தி குமாரசாமி சிறீலங்கா இராணுவத்தால் ஆட்கடத்தல் செய்யப்பட்டு, மிருகத்தனமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, தேடிப்போன தாயாருடனும் தம்பியுடனும் அயலவ நண்பருடனும் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. ✳

## சதாசகாய மாதா .....

புனித பீற்றர்ஸ் ஆலயம் என எத்தனையோ கிறிஸ்தவ தேவாலயங்களும் வடக்கிலும் கிழக்கிலும் சிறீலங்கா படையினரால் அழிக்கப்பட்டுள்ளன. இவ்விதம் அழிக்கப்பட்ட ஆலயங்களின் எண்ணிக்கை ஆயிரத்து அறுநூறுக்கும் மேலென இது குறித்த புள்ளிவிபர ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த வரிசையில் சிறீலங்காப் படையினரின் கை வரிசைக்கு இம்முறை முரசுமோட்டை சதாசகாய மாதா தேவாலயம் இலக்காகியுள்ளது. பரந்தன் முல்லைத்தீவு வீதியில் உள்ள சதாசகாய மாதா தேவாலயம் மீது இம் மாதம் 3ம் திகதி சந்திரிகா அரசின் சிங்கள பௌத்த பேரினவாதப் படை திட்டமிட்ட முறையில் குண்டுவீசியுள்ளது.

இதனால் சதாசகாய மாதா தேவாலயத்தின் கட்டிடத்தின் ஒரு பகுதி முற்றாகச் சேதமடைந்துள்ளது. கட்டிடத்தின் பின் பகுதி இடிந்து விழும் அபாயத்தில் இருப்பதாகவும் அதனால் ஆலயத்துள் யாரையும் செல்ல வேண்டாம் என அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளிடம் தாம் அடைந்து வரும் இராணுவத் தோல்விகளின பழிவாங்கல் நடவடிக்கையாகவும் தமிழ் மக்களின் கலாச்சார மத வழிபாட்டிடங்களை அழித்தொழிக்கும் சிறீலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாத அரச ஆதரவுச் செயற்திட்டத்தின் ஒரு செயற்பாடாகவும் அமைந்துள்ள இந்த சதாசகாய மாதா ஆலய அழிப்பினை உலகின் கண்களுக்கு அம்பலப்படுத்துவது புலம் பெயர் தமிழர்களாகிய நமது கடமையாக உள்ளது. ✳

## சிக்குண்ட நிலையில் சிறீலங்கா ........

வீதியின் இருமருங்கிலும் அரைக் கிலோமீற்றருக்கு, காடுகள் தீப்பற்றி எரிந்து கருகுவதாகவும் இதனால் இப் பகுதியெங்கும் ஒரே புகை மண்டலமாகக் காட்சியளிப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகின் இயற்கை வளங்களான காடுகளை எரியூட்டி அழிப்பது சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்குமான குற்றச் செயலாக ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

கடைசியாகக் கிடைத்த களச் செய்திகளின் படி ஜெயசிக்குறுப் படையினர் ஆக்கிரமித்துள்ள பிரதேசத்துள் ஊடுருவி நிலையெடுத்த விடுதலைப் புலிகள் இம் மாதம் 4ம் திகதி இராணுவ ஜீப் வண்டி மீது நடாத்திய கண்ணி வெடித்தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட மேலும் நான்கு இராணுவத்தினர் கடுங்காயம் அடைந்தனர். காயமடைந்தவர்களுள் ஜெயசிக்குறு படையெடுப்புக்குத் தலைமைக் கட்டளை அதிகாரிகளில் ஒருவராக கடைமையாற்றி பலத்த போர் அனுபவம் வாய்ந்த இராணுவ நிபுணரான ஜகத் ஜயசூரியாவும் ஒருவராவார். இவ் அதிகாரி அவசர சிகிச்சைக்காக விமானம் மூலம் அநுராதபுர ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஜெயசிக்குறு ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் மிகப் பலமான பாதுகாப்புடன் காணப்பட இப்பகுதிக்குள் விடுதலைப்புலிகள் எவ்வாறு ஊடுருவினர் என்பது சிறீலங்கா இராணுவத் தலைமைகளுக்கு பெரும் புதிரையும் பாதுகாப்பு குறித்த பலத்த உளவியல் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில், இம்மாதம் 3ம் திகதி ஒலுமடுவில் இராணுவத் துருப்புக் காவி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய மோட்டடார்த் தாக்குதலில் அது சேதமடைந்தது எனவும் அதனை புல்டோசர்கள் கொண்டு இழுத்துச் செல்ல படையினர் முயன்ற பொழுது, விடுதலைப் புலிகள் தொடர்ந்து மோட்டார் தாக்குதல் நடாத்தி அதனை முற்று முழுதாக அழித்தனர் எனவும் தெரிய வருகிறது.

மேலும் சிறிலங்காப் படையினரால பாதுகாப்புமிகுந்த பகுதியா பேணப்படும் மதியாமடுப் பகுதியில் ஊடுருவி இம்மாதம் 06ம் திகதி விடுதலைப் புலிகள் நடாத்திய கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவத்தினர் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் ஒன்று முற்றாகச் சேதமடைந்து ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட பல இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர். ✳

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## எல்லாமே உன் கையில்

கிரேக்கத்து கதை ஒன்று– ஒரு வெண்தாடிக்கார முதியவர் இருந்தார். அவர் மகா அறிஞர். அந்த வெண் தாடிக்கார முதியவரிடம் ஒரு இளைஞன் வந்தான். அந்த இளைஞன் வலது கையை இறுக்கிப் பொத்திப்பிடித்திருந்தான். அவனுடைய அந்த மூடிய கைகளுக்குள் ஒரு சின்னஞ்சிறிய அடைக்கலம் குருவி இருந்தது. அந்த இளைஞன் வெண்தாடிக்கார அறிஞரிடம், "பெரியவரே இந்த என்னுடைய கைக்குள் இருக்கும் குருவிக்கு உயிர் இருக்கிறதா? இல்லையா?" என்று கேட்டான்.

முதியவர் புன்னகைத்தார். உயிர் இருக்கிறது என்று சொன்னால், அவன் கையை இறுக்கி அமுக்கி விட்டுத் கையைத் திறந்தான் என்றால் அங்கே இறந்த குருவி இருக்கும். உயிர் இல்லை என்று சொன்னால் அவன் மெதுவாகக் கையைத் திறந்தான் என்றால் உயிருடன் குருவி பறக்கும். இளைஞனின் கேள்வியின் நரித்தந்திரம் பெரியவருக்கு நன்கு விளங்கியது. ஒரு கணம் வெண்தாடியைப் பலமாக உருவி விட்டார். மறுகணம் அமைதியாகக் கூறினார், "எல்லாமே உன் கையில்" என்று. நரித்தந்திரம் தோற்றது.

நரித்தந்திரத்தை வெல்வதற்கு அன்று அந்த கிரேக்க அறிஞர் சொன்ன அதே சொல்லைத்தான், இன்று சந்திரிகா அம்மையாரின் நரித்தந்திரத்தை வெல்வதற்கும் எங்கள் தேசத் தலைவன் பிரபாகரன் புலிகளின் குரல் ஏழாவது ஆண்டு நிறைவு விழாவில், தமிழ்த் தொடர்பு சாதனத் துறைகளில் கடமையாற்றுபவர்களுக்கும் கலை இலக்கியப் படைப்பாளிகளுக்கும் மத்தியில் உரையாற்றுகையில் தமக்கே உரியபாணியில் உள்ளம் நெகிழ, எம்மைப் பார்த்துக் கூறியுள்ளார்.

ஆம். எமது சொந்தங்கள் தம் சொந்த உயிர்களையே எம் தாயக விடுதலைக்கான ஆயுதமாக்கி தேச விடுதலைப் போராட்டம் நடத்துகின்ற இக்காலக்கட்டம், ஒவ்வொரு தமிழனுக்கும் அவனது வாழ்வின் அதிமுக்கியமான காலகட்டம். இக்காலத்தின் பேறுகளாலேயே தமிழனின் எதிர்காலம் நிர்ணயமாகப்போகிறது. எங்கள் குழந்தைகளின் வருங்காலம் வடிவமைக்கப்படப்போகிறது. உலகில் தமிழன் எங்கு வாழ்ந்தாலும், எப்படி வாழ்ந்தாலும் அவனது எதிர்காலம் இந்த விடுதலைப் போராட்டத்தின் பேறுகளால் பாதிக்கப்படும். அதனால், ஒவ்வொரு தமிழனும் எவ்வெவ் வகைகளில் எல்லாம் இந்த விடுதலைக்கு உழைக்க முடியுமோ அவ்வவ் வகைகளில் எல்லாம் பங்களிக்க வேண்டிய நேரம் இது.

ஆனாலும், சிறீலங்கா ஆக்கிரமிப்பு அரசு தமிழீழ மக்களுக்கு எதிராக சர்வதேச சட்டங்களுக்கு மாறான ஆயுதப் போராட்டத்தையும் அதை நியாயப்படுத்துகின்ற கருத்துப் போராட்டத்தையும் ஏக காலத்தில் நடாத்துவதினால் ஒவ்வொரு தமிழனும் தமிழர்களுக்கு எதிரான சிறீலங்காவின் இவ்விரு போராட்டத்தையும் ஏக காலத்தில் முறியடிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஆகவே, தமிழீழ மக்களின் ஆயுதப் போராட்டத்திற்கு வலிமை சேர்ப்பதும் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தின் தேவையை – சத்தியத்தன்மையை – உறுதிப்பாட்டை – வெற்றிப்போக்கை உலகுக்கு வெளிப்படுத்தி, சிறீலங்காவின் கருத்துப்போராட்டத்தின் பொய்மையை –போலித்தனத்தை – இனவெறிப்போக்கை தரணிக்கு உணர்த்தவேண்டும்.

சந்திரிகா அம்மையார், இலங்கைத்தீவை பன்மைச் சமுதாயத்தின் தாயகமாகக் காட்டும் வரலாற்றுத் திரிபுவாதத்தில் இறங்கியுள்ளார். ஆனால், தமிழீழத் தேச வரலாற்றின்படி, 17 ஆண்டுகள் மட்டுமே பராக்கிரமபாகுவின் வளர்ப்புப்பிள்ளையாகிய செண்பகப்பெருமாளின் ஆக்கிரமிப்பு ஆட்சியில் யாழ்ப்பாண அரசு இருந்துள்ளது. இந்த ஆக்கிரமிப்பும் யாழ்ப்பாண அரசர்களால் முறியடிக்கப்பட்டு ஆக்கிரமிப்பாளர்கள் ஓடஓட விரட்டப்பட்டதை வரலாறு தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. காலனித்துவ ஆட்சிக்காலத்திலும் சிங்களவர்களும் தமிழர்களும் தனித்தனியான தலைமைகளின் கீழேயே காலனித்துவத்திற்கு எதிராகப் போராடினர். பிரித்தானிய காலனித்துவம் விலகிய 1948 முதல் 1972 வரை கூட தமிழர்களின் இறைமை முற்றுமுழுதாக சிங்களப் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்படாது, பிரித்தானிய அரசிடமும் தொடர்ந்து இருந்து வந்தது. இத்தமிழீழ இறைமையையே சிறீலங்கா அரசு ஆக்கிரமிப்புச் செய்து நிற்கிறது.

இந்த நேற்றைய வரலாற்றைத் திரிபுவாதம் செய்யும் சந்திரிகா அம்மையார் இன்று, தமிழீழம் மீட்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சியில் சுதந்திரமாக வாழத்துடிப்பதையும் மூடிமறைத்து, தமிழீழ மக்களை இனஅழிப்புச் செய்தாவது தமிழீழ மக்களை சிங்களத்திற்கு அடிமைப்படுத்த நினைத்து, முழு இலங்கைத் தீவையையுமே பேரழிவுக்கு உள்ளாக்கி வருகிறார். இதற்காக தமிழ் மக்கள் இலங்கைத் தீவு முழுவதுமே இனவதை செய்யப்படுகின்றனர். தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக இலங்கைத் தீவு முழுவதுமே தமிழர்களுக்கு சாதாரண மனித வாழ்வுகூட மறுக்கப்படுகிறது. இது ஒன்றே தமிழர்களுக்கு பாதுகாப்புடனான அமைதியைத் தரக்கூடிய தமிழர் ஆட்சி ஒன்றின் தேவையை உலகுக்குத் தெட்டத்தெளிவாக்கி நிற்கிறது. ✳

# பெரும் நெருக்கடியில்

கடற்கரும்புலிகள் உள்ளிட்ட கடற் புலிகளின் அணியொன்று 22–02–98 ஞாயிறு இராப்பொழுதில் நடைபெற்ற கடற்சமர் ஒன்றில் சிறீலங்கா கடற்படைக்குச் சொந்தமான இரண்டு கப்பல்களை மூழ்கடித்துள்ளது. கடற்படையினருக்கும் இராணுவத் திற்கும் பலத்த இழப்பை ஏற்படுத்தியுள்ள இக்கடற்தாக்குதலானது, சிறீலங்கா இராணுவ வட்டாரங்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இவ்வாறு, இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளமைக்குக் காரணம், கடற்படைக் கலங்கள் இரண்டினை இழக்கவேண்டி வந்த தினால் மட்டுமல்ல, அன்றி பல கடற்படையினரும் இராணுவத்தினரும் கொல்லப்பட்டதினால் மட்டுமல்ல, இத்தாக்குதலை கடற்புலிகள் எவ்வாறு நடத்தி முடித்தார்கள் என்பதே அதுவாகும். அதாவது, இரகசியமான பயணத்தின்போது அதுவும் கட்டுப் பாட்டுப் பிரதேசம் என கடற்படை கருதும் பகுதிக்குள் ஒரு பலம் பொருந்திய பெரும் கடற்படையணி எவ்வாறு அடிவாங்கியது என்பதே சிறீலங்காப் படையினருக்கும் அரசுக்கும் ஏற்பட்டுள்ள பேரதிர்ச்சியாகும். ஏனெனில், திருமலையில் இருந்து யாழ் குடாநாட்டுக்கான கப்பல் சேவை மிகவும் இரகசியமானதொன்றாகவே மேற்கொள்ளப்படுகின்றது. அத்தோடு, கப்பல் அணி கரையில் இருந்து மிக நீண்ட தொலைவில் சுமார் 25 கடல் மைல்களுக்கு அப்பால் பெரும்பாலும் வெளிநாட்டுக் கப்பல்கள் பயணம் செய்யும் மார்க்கத்தினூடாகவே பயணம் செய்வதுண்டு. இந்நிலையில் இக் கப்பல்கள் தொடரணி குறித்த தகவல்கள் எவ்வாறு புலிகளுக்குக் கிடைக்கப் பெற்றது என்பது

**கடற்புலிகளிடம் அடிவாங்கியுள்ள கப்பல்கள் தனியாக பாதுகாப்பு எதுவுமின்றி சென்றவையல்ல. முழுப்பாதுகாப்புடன் சென்ற ஒரு கடற்படை அணியே அது. இந்த ரீதியில் கடற்புலிகளின் இத் தாக்குதலானது, சிறீலங்கா கடற்படைக்கு விடுதலைப் புலிகள் விடுத்துள்ள பெரும் சவால் என்றே கூறலாம்.**

முதலாவது அதிர்ச்சியாகும். அடுத்ததாக காங்கேசன்துறை, பருத்தித்துறை பிரதேசம் என்பது சிறீலங்கா கடற்படையைப் பொறுத்து மிகவும் பாதுகாப்பானதொரு பிரதேசமே. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து இது சுமார் 40 மைல்களுக்கு அப்பாலுள்ள இப்பிரதேசத்தினுள் புலிகள் பிரவேசிப்பது என்பது, அவர்களுக்கு ஒரு ஆபத்தானதொரு காரியமாகவே இருக்கும் என்பது எதிர்பார்க்கக் கூடியதொன்றே. அதிலும் வெற்றிலைக் கேணியில் நிரந்தரமாக கடற்படையின் ஒரு அணி, அதிவேக டோறாப் பீரங்கிப் படகுகளுடன் நிலைகொண்டு இருக்கையில் அதனைத் தாண்டி பருத்தித்துறைக் கடற்பரப்பில் செல்வது என்பது, பெரும் ஆபத்தான ஒன்றாகவே அமைந்துவிடக்கூடியது. அவ்வாறு இருந்தும், இப்பாதுகாப்பு அரணையும் தாண்டி காங்கேசன்துறை, பருத்தித் துறை கடற்பரப்பில் தாக்குதல் ஒன்றை கடற்புலிகள் நடத்தியுள்ளமையானது, கடற்புலிகளின் ஆற்றல் குறித்து அதிர்ச்சி அடைவது ஆச்சரியப் படக்கூடியது அல்ல. இதனைத்தவிர, கடற்புலிகளிடம் அடிவாங்கியுள்ள கப்பல்கள் தனியாக பாதுகாப்பு எதுவுமின்றி சென்றவையல்ல. முழுப்பாதுகாப்புடன் சென்ற ஒரு கடற்படை அணியே அது. இந்த ரீதியில் கடற்புலிகளின் இத் தாக்குதலானது, சிறீலங்கா கடற்

## கடல்வழி விநியோகம்

படைக்கு விடுதலைப் புலிகள் விடுத்துள்ள பெரும் சவால் என்றே கூறலாம். ஏனெனில் இத்தாக்குதலானது, வடக்கு – கிழக்கு கடற்பிராந்தியத்தின் எப்பகுதியிலும் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொள்ளும் பலம் பெற்றவர்களாக உள்ளனர் என்பதை நிரூபிப்பதாகவே உள்ளது. அதாவது, சிறீலங்கா கடற்படை தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதி – ஆளுமைக்கு உட்பட்ட பகுதி என்ற ரீதியில் எப்பொழுதுமே சுதந்தரமான நடமாட்டத்தை மேற்கொள்ளமுடியாது என்பதையே வெளிகாட்டியுள்ளது. இது ஒருபுறம், இந்தக் கடற்படை அணியொன்று யாழ் குடாநாட்டிற்கான பயணத்தின் போது வாங்கியுள்ள அடியானது, குடாநாட்டிற்கான கடல்வழி விநியோகத்தில் மேலும் புதிய சிக்கல்களை உருவாக்கியதொன்றாக மாறியுள்ளது. ஏற்கனவே கடல்வழி விநியோகமானது, கடற்புலிகளின் தாக்குதலினால் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியே இருந்தது. இந்த நிலையில் தற்போது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது, கடல்வழி விநி யோகத்தில் உள்ள சிக்கலை மேலும் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. சிறீலங்கா இராணுவம் ஏற்கனவே கடல்வழி விநியோகத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் காரணமாகவே ஜெய சிக்குறுய் நடவடிக்கையை ஆரம்பி த்தது. தரைவழியாக குடாநாட்டிற்கு ஒரு பாதையை அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை 10 மாதம் ஆகியும் இன்னும் முடிவுறாத நிலையில் பெரும் நெருக்கடிக்குள் ளாகியதென்பது சிறீலங்கா அரசிற்குப் பெரும் கவலை அளிக்கும் ஒன்றாகவே நிச்சயம் இருக்கும். ✳

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 22-02-98 இல் காங்கேசன்துறை - பருத்தித்துறை கடற்சமரில் வீரகாவியம் படைத்த கடற்கரும்புலிகள்

லெப். கேணல் கரன் (பாலசுந்தரம் கோபாலகிருஷ்ணன், பொலநறுவை)
மேஜர் தமிழினியன் (நடராசா கிருபாகரன், யாழ்ப்பாணம்)
மேஜர் சுலோஜன்/மாமா (குமாரலிங்கம் விஜயேந்திரன், திருமலை)
மேஜர் குமரேஸ் (துரைராசா செல்வகுமார், வவுனியா)
மேஜர் வள்ளுவன் (செல்வராசா தவராசா, யாழ்ப்பாணம்)
மேஜர் தமிழ்மங்கை (துரைராசா சத்தியவாணி, பூநகரி)
கப்டன் மொறிஸ்/தமிழின்பன் (தர்மபாலசிங்கம் தயாபரன், யாழ்ப்பாணம்)
கப்டன் ஜனார்த்தனி (கபிலைநாதன் சுகந்தி, முள்ளியவளை)
கப்டன் நங்கை (பட்டுராசா கௌசலா, யாழ்ப்பாணம்)
கப்டன் வனிதா (கந்தையா புஷ்பராணி, நெடுங்கேணி)
லெப். மேகலா (தங்கராசா தமயந்தி, யாழ்ப்பாணம்)

**வீரவணக்கம்**

## கடற்படையின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே.........

கடும் சமர் நடாத்தினர். இச்சமரில் காங்கேசன்துறைக் கடலில் வைத்து எழுபத்தெட்டுப் பேருடன் சென்று கொண்டிருந்த 'பபப்தா' என்ற தரையிறங்கு கப்பல், இரவு 9.30 மணியளவில் இரு கடற் கரும்புலிப் படகுகளால் மோதியழிக்கப்பட்டடது. இக்கப்பலில் இருந்த இரண்டு யுத்தத் தாங்கிகளும் இக்கப்பலுடன் சேர்ந்து மூழ்கியுள்ளது.

இக்கடற்சண்டையின் போது அதிவேக டோறாப் படகினைச் சிதறடிக்கவென விரைந்த இரு கரும்புலிகளில் ஒருவர் டோறாவின் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடையவே டோறா தப்பித்துக் கொண்டது. காயத்துடன் மீட்கப்பட்ட இக்கருப்புலி பின்னர் விடுதலைப் புலிகள் முகாமொன்றில் வீரச் சாவடைந்தார். மற்றவர் உயிருடன் மீட்கப்பட்டார்.

இந்த ஆண்டின் மிகப்பெரிய கடற்போரான இதில் ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டும் பலர் காணாமல் போயுமுள்ளனர். இரு யுத்த டாங்கிகள் உட்பட பாரிய ஆயுத இழப்பையும் சிறீலங்கா சந்தித்து உள்ளது. இழக்கப்பட்ட கப்பல்களில் ஒன்று, ஏற்கனவே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி திருகோணமலையில் பலத்த செலவில் திருத்தப்பட்டு சம்பவம் நடைபெற்ற அன்றுதான் மீளவும் கடற்படை அணியில் சேர்த்துக் கொள்ளப் பட்டதாகத் தெரிய வந்துள்ளது. விடுதலைப் புலிகள் தரப்பில் இத்துணிகரமான வெற்றித் தாக்குதலை நடாத்திய பதினொரு கடற் கரும்புலிகள் வீரச்சாவு எய்தினர். ✳

## ஒலுமடு நோக்கி முன்னேற முயன்ற படைகள் மீது விடுதலைப் புலிகள் நேரடித்தாக்குதல்

✳ **50க்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலி**
✳ **படையினரின் 16 உடல்கள் கையளிப்பு**

**24-02-98** அன்று காலை 5.15 மணியளவில் கரிப்பட்ட முறிப்புப் பகுதியிலிருந்து ஒலுமடு நோக்கி முன்னேற முயன்ற சிங்களப்படைகள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய எதிர்த்தாக்குதலில் 50 க்கு மேற்பட்ட சிறீலங்காப் படையினர் கொல்லப்பட ஏனையோர் பின்வாங்கித் தப்பித்துக் கொண்டனர். கொல்லப்பட்ட படையினரின் சடலங்களில் சிதைந்து போனவை எரிக்கப்பட்டதாகவும் நல்ல நிலையில் இருந்த 16 சடலங்கள் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் விடுதலைப் புலிகளினால் கையளிக்கப்பட்டன. விடுதலைப் புலிகள் தரப்பில் 6 போராளிகள் இச் சண்டையில் வீரமரணம் எய்தினர்.

## கட்டுவன்வில பொலிஸ் நிலையம் தாக்கி அழிப்பு

அதேவேளை, 24ஆம் திகதியன்று காலை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கட்டுவன்வில பொலிஸ் நிலையமும் தாக்கப்பட்டு பத்தே பத்து நிமிடத்தில் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப் பட்டது. இக்கைப்பற்றலின் போது, 16க்கும் மேற்பட்ட பொலிஸார் கொல்லப்பட ஆயுதங்களும் சக்திவாய்ந்த தொடர்புச் சாதனக் கருவிகளும் விடுதலைப் புலிகள் வசமாகின.

## கிளாலி இறங்குதளத்தின் மீது சிறுத்தைப் படையணி தாக்குதல்

கடந்த மாதம் 25ஆம் திகதியன்று இரவு கடற்படையினரும் கடற்படைக் கொமாண்டோ அணிகளும் நிலைகொண்டிருந்த கிளாலி இறங்குதளத்தின் மீது சிறுத்தைப் படையின் கடலணிப்பிரிவு நடாத்திய தாக்குதலில் ஒரு வோட்டர் ஜெட் அதிவேக விசைப்படகு அழிக்கப்பட்டதுடன், சக்தி வாய்ந்த இயந்திரங்கள் பூட்டப்பட்ட இரண்டு வேறு படகுகளும் சேதமாக்கப்பட்டன. விநியோகக் களஞ்சியச்சாலையும் எரித்தழிக்கப்பட்டது. இத்தாக்குதலின் போது கிளாலிக் கடற்பரப்பில் ரோந்து சென்று கொண்டிருந்த இரு வோட்டர் ஜெட்படகுகள் ஆனையிறவு படைத்தளம் நோக்கி பின்வாங்கி ஓடித்தப்பித்துள்ளன.

சிறீலங்கா கடற்படையினர் ஐந்து பேர் கொல்லப்பட்ட இத்தாக்குதலில், மேஜர் குமிலன் ( யேசுதாசன் ஜோன், யாழ். மாவட்டம்), கப்டன் ஜெயந்தன்( மாரிமுத்து விஸ்வலிங்கம், வவுனியா), கப்டன் சூரியன் (மயில்வாகனம் சந்திரன், திருகோணமலை) ஆகிய மூன்று போராளிகள் வீரச்சாவுற்றனர்.

## இராணுவ-ஊர்காவல் கூட்டுரோந்து படையினர் மீதான தாக்குதல்

கடந்த 26ஆம் திகதியன்று வெலிகந்தவுக்கு அண்மித்த பகுதியான மாணிக்கம்பட்டியில், சிறீலங்காவின் இராணுவ - ஊர்காவற் கூட்டு ரோந்துப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட, இரு ஊர்காவல் படையினர் படுகாயமடைந்ததாக சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது. இதையடுத்து ஊர்காவல் படையினர் தமிழ்ப் பொதுமக்கள் மீது நடாத்திய பழிவாங்கும் தாக்குதல்களினால் தமிழ் மாணவர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இது குறித்து தகவல் வெளியிட்ட கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று, காவல் இராணுவச் சோதனைச் சாவடியே விடுதலைப் புலிகளினால் தாக்கியழிக்கப்பட்டது எனவும் இதில் ஆறு இராணுவத்தினரும் ஏழு ஊர்காவற் படையினரும் கொல்லப்பட்டதாகத் தகவல் வெளியிட்டுள்ளது. ✳

## தம்பின்ன கிராமத்தில் 3 படையினர் பலி

இம்மாதம் 2ஆம் திகதி மட்டக்களப்பு எல்லைக் கிராமமான தம்பின்ன சிங்களக்கிராமத்தில் ரோந்து சென்றுகொண்டிருந்த சிங்களப் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர். இவ்வெற்றித் தாக்குதலில் மூன்று சிங்களப் படையினர் கொல்லப்பட, பலர் காயம் அடைந்துள்ளனர். ✳

## வடமராட்சி கிழக்கிலும் மூன்று இராணுவத்தினர் பலி

இம்மாதம் 3ஆம் திகதி நண்பகல், வடமராட்சி கிழக்கு தாளையடி முகாமில் இருந்து மக்கள் குடியிருப்புக்கள் நோக்கித் தேடுதல் நடவடிக்கைக்குப் புறப்பட்ட சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட பல இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை. ✳

## சென்ற இதழ் திருத்தம்

25 .02. 1998 திகதி இடப்பட்ட 'களத்தில்' இதழில் **1998 தீர்க்கமான ஆண்டு** என்ற கட்டுரையின் நான்காம் நிரலின் இறுதியில் தரப்பட்ட வசனத்தை, இதன் மூலம் இதுவரை தனது விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் நடத்திய போரில் மக்களையும் பங்காளியாக்க முற்படுகின்றது எனத் திருத்தி வாசிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

– ஆசிரியர் குழு –

கடந்த ஐம்பது ஆண்டு காலமாக, அடக்குமுறை என்ற ஒரே வழியில்தான் சிங்களம் சென்று கொண்டிருக்கின்றது. இந்தக் குருட்டுத்தனமான அணுகு முறையால்தான் இலங்கையில் அமைதிகுலைந்து போரும் வன்முறையும் தலைதூக்கி நிற்கின்றன. இந்த அணுகுமுறையைச் சிங்கள தேசம் மாற்றிக்கொள்ளாவிடின், முடிவில்லா யுத்தத்தையும் பேரழிவையுமே அது சந்திக்க வேண்டிவரும். இந்த அழிவுப் பாதையைத் தேர்ந்தெடுத்து நிற்பது, சிங்களப் பேரினவாதிகளேயன்றி, நாமல்ல.

இராணுவ அடக்குமுறைக் கொள்கையால் சிங்கள தேசம் தன்னைத்தானே அழித்துக்கொண்டிருக்கிறதே தவிர, தமிழினத்தின் சுதந்திர எழுச்சியை அதனால் அழித்துவிட முடியாது. இந்த உண்மையைச் சிங்களப் பேரினவாதம் என்றோ ஒரு நாள் உணர்ந்தே தீரும்.

**– தமிழீழத் தேசியத் தலைவர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறீலங்காவின் மேலாண்மையில் விடுதலை பெறும் நாளே தமிழ் மக்களது சுதந்திரப் பொன்நாள்!

சுதந்திரப் பொன்நாள் தீபாவளியைத்தான் வெடிகொளுத்திக் கொண்டாட வேண்டும் என்றில்லை. சிறீலங்காவின் பொன் விழாக் கொண்டாட்டத்தையும் வெடி கொளுத்திக் கொண்டாடலாம் என்பதை சந்திரிகா அரசு நிரூபித்துக் காட்டியுள்ளது.

சிறீலங்காவின் 50வது ஆண்டு விழாக் கொண்டாட்டத்துக்கு முன்பும் பின்பும் கண்டியிலும் கொழும்பிலும் பாரிய குண்டுகள் வெடித்து சுதந்திரப்

> "சிங்களவர்களுக்கு வெண்ணெயாக இருப்பது, தமிழ் மக்களுக்கு சுண்ணாம்பாக இருக்கிறது. சிங்களவர்களுக்கு நன்மையாக இருப்பது, தமிழ் மக்களுக்கு தீமையாக இருக்கிறது. சிங்களவர்களுக்கு பொன்னான நாளாக இருப்பது, தமிழ் மக்களுக்கு கரிநாளாக இருக்கிறது."

பொன்விழாக் கொண்டாட்டத்தின்போது சுதந்திரம்

பறிபோய்விட்டதை ஊருக்கும் உலகத்துக்கும் எடுத்துக் காட்டிவிட்டது. சிறீலங்காவின் பொன்விழாக் கொண்டாட்டத்தை பழைய கண்டி இராச்சியத்தின் தலைநகரான கண்டியில் கோலாகலமாகக் கொண்டாட வேண்டுமென்பதே சந்திரிகா அரசின் திட்டமாகும்.

இதற்காக அமைக்கப்பட்ட ஜனாதிபதியின் பணிக்குழுத் தலைவராக துணைப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தவே ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்டார். சிறீலங்காவின் பொன்விழாக் கொண்டாட்டத்துக்கு கண்டி நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு இன்னொரு முக்கிய காரணமும் உண்டு. ஜனாதிபதி சந்திரிகா, அவரது தாயாரும் பிரதமருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அமைச்சர் ரத்வத்த இவர்கள் எல்லோரது குடும்பங்கள் கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டது.

கண்டி மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் ரத்வத்த குடும்பம் ஆளும் வர்க்கத்தைச் சார்ந்த நிலப் பிரபுத்துவக் குடும்பங்களில் ஒன்றாக விளங்கியது. கண்டியின் கடைசித் தமிழ் மன்னனான சிறீவிக்கிரம இராஜசிங்கனை அந்நிய ஆட்சியாளர்களான வெள்ளைக்காரர்களுக்குக் காட்டிக் கொடுத்த 'பெருமை'யும் இந்தக் குடும்பத்தைச் சார்ந்தது என்பதை இங்கு சுட்டிக் காட்டவேண்டும். 1815ஆம் ஆண்டு கண்டி இராச்சியத்தின் பரிபாலன உரிமையை பிரிட்டிஷ் அரசுக்கு கையளிக்கும் ஒப்பந்தத்தில் (Kandyan Convention) கையெழுத்திட்ட பதின்மூன்று கண்டிய அதிகாரிகளில் இன்றைய ரத்வத்த பரம்பரையைச் சேர்ந்த கொள்ளுப்பாட்டனும் ஒருவராவர்.

எனவே, சிறீலங்காவின் பொன்விழாக் கொண்டாட்டத்தை கண்டியில் கொண்டாடுவதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை விழுத்த ஜனாதிபதி சந்திரிகாவும் அமைச்சர் ரத்வத்தவும் திட்டம் தீட்டினார்கள்.

இந்த இரண்டு காரணத்தைவிட முக்கியமான மூன்றாவது காரணமும் இருந்தது. 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளை போரில் முறியடித்துவிட்டு வவுனியா – கிளிநொச்சிப் பாதையைத் திறந்து இதுவரை தங்கள் ஆட்சிக்குள் இல்லாத வட தமிழீழத்தை சிறீலங்காவோடு இணைத்துவிட்டதாக சிங்களவர் மத்தியில் தண்டோராப் போட்டுச் சொல்வதுதான் அந்த மூன்றாவது காரணமாகும். இதற்கு அடையாளமாகக் கண்டியில் இருந்து சொகுசு பேரூந்து வண்டியொன்றை கிளிநொச்சிக்கு ஓட விடுவதும் ரத்வத்தயின் திட்டமாக இருந்தது.

ஆனால், நடந்ததோ வேறு. ரத்வத்தவை முந்திக்கொண்டு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ட்ரக்கு வண்டியொன்றை கிளிநொச்சியிலிருந்து கண்டிக்கு அனுப்பி வைத்துவிட்டதாகத் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் பேசிக்கொண்டதாக அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவித்தன. அது மட்டுமல்லாமல் சுதந்திர தினத்தன்று கிளிநொச்சியில் சிறீலங்காவின் தேசியக் கொடியான சிங்கக் கொடியை பறக்கவிடவிருந்த அமைச்சர் ரத்வததவின் கனவு கலைக்கப்பட்டு விடுதலைப் புலிகளால் தமிழீழத்தின் தேசியக் கொடியான புலிக்கொடி கம்பத்தில்பட்டொளி வீசிப் பறக்க விடப்பட்டது. கண்டியில் சிறீலங்காவின் சுதந்திரப் பொன்விழாக் கொண்டாடப்படுவதையடுத்து, நகரைச் சுற்றி பொலிசாரினால் பலத்த பாதுகாப்பு வேலி போடப்பட்டது. கண்டி நகருக்குள் வெளியிலிருந்து தமிழர்கள் உள் நுழைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே முற்றாகத் தடை போடப்பட்டது. கண்டியின் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஆயிரக்கணக்கான பொலிசார் 24 மணி நேரமும் கடமையிலீடுபடுத்தப்பட்டனர். நகரைச் சுற்றி தடை முகாம்கள் வீதிக்கு வீதி போடப்பட்டது. அப்படியிருந்தும், போடப்பட்டிருந்த அதி உயர் பாதுகாப்புகள் அத்தனையையும் கடந்து ஜனவரி மாதம் 26ஆம் திகதி காலை குண்டு பொருத்தப்பட்ட ட்ரக் வண்டியொன்று தலதா மாளிகையின் புறமதில் சுவரோடு மோதி பாரிய சேதத்தை விளைவித்தது.

இந்தத் தாக்குதலை யார்தான் நடத்தியிருந்தாலும், சிறீலங்கா தேசத்தை இத் தாக்குதல் உளவியல் ரீதியாக பெரிய உலுக்கு உலுக்கி விட்டதென்பதில் எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது. அதைவிட, சிறீலங்கா அரசு தென்னிலங்கைப் பகுதிகளில் ஏற்படுத்தியிருக்கும் "பலத்த பாதுகாப்புக்கு" பலத்த அச்சுறுத்தலாகவும் இத்தாக்குதல் அமைந்துவிட்டது.

**- நக்கீரன் -**

இத்தாக்குதல் சம்பவத்தைச் சாட்டாக வைத்து இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றன. ஒன்று, விடுதலைப் புலிகளைத் தடை செய்ததாக சிறீலங்கா அரசு அறிவித்தது. இரண்டாவது, கண்டியின் பாதுகாப்புக்கு ஊறுவிளைவித்த குண்டுத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று துணைப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்த தனது பதவியை இராஜினாமாச் செய்தது.

இந்தப் பதவி விலகலை ரத்வத்த உடனடியாகச் செய்யவில்லை. கொழும்பில் ஐ.தே.கட்சியால் நடத்தப்பட்ட கண்டன ஊர்வலத்தில் ரத்வத்தவின் கொடும்பாவி எரிக்கப்பட்டதையடுத்தே அமைச்சர் தனது பதவி விலகல் கடிதத்தைக் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகளை சிறீலங்கா அரசு தடை செய்வது, இது முதற் தடவையல்ல. 1979ஆம் ஆண்டு தொடக்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட இயக்கமாகவே இருந்து வருகிறது. எனவே இப்போது போடப்பட்டுள்ள தடை வெறும் சம்பிரதாயத்திற்காக. சிங்கள – பௌத்த பீடாதிபதிகள், சிங்கள – பௌத்த வெறியர்கள் இவர்களைத் திருப்திப்படுத்தப் போடப்பட்ட தடையாகவே கருத வேண்டும்.

இதுவரை காலமும் விடுதலைப் புலிகளைத் தடை செய்யக்கோரி சிங்கள – பௌத்த வெறியர்கள் கூப்பாடு போட்ட போதெல்லாம் "விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கான கதவுகளை நாம் திறந்து வைத்திருக்கிறோம். விடுதலைப் புலிகளைத் தடை செய்தால் பேச்சுவார்த்தைக்கான அந்தக் கதவு மூடப்பட்டுவிடும். அதன்பின் விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டிய காலம் வரும்போது பேசமுடியாது போய்விடும்" என்பதுதான் சிறீலங்கா அரசு சொன்ன

> "சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் கடைசிவரை ஒட்டாது" என்பதை சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டம் மீண்டும் தெட்டத்தெளிவாக நிரூபித்துக் காட்டிவிட்டது. தமிழ் மக்களைப் பொறுத்தளவில் தமிழீழம் சிறீலங்காவின் மேலாண்மையிலிருந்தும், அடக்குமுறை ஆட்சியிலிருந்தும் விடுதலை பெறும் நாளே சுதந்திரப் பொன்நாளாகும்.

சமாதானமாகும்.

இப்போது விடுதலைப் புலிகளைத் தடை செய்துவிட்டதால் பேச்சுவார்த்தைக்கான கதவுகளை சிறீலங்கா அரசு சிக்காராக அடித்து மூடிவிட்டு போரை முன்னெடுப்பதுதான் அரசின் ஒரே நோக்கமாக இருக்கிறது என அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

துணைப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தவின் பதவி விலகல் நாடகம் அதிக நாட்கள் நீடிக்கவில்லை. ரத்வத்த பதவி விலகக் கூடாதென பௌத்த மத பீடாதிபதிகள், பௌத்த சங்கங்கள், ஆளும்கட்சி – எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், தொழிற்சங்கங்கள் பலத்த குரல் எழுப்பின. இதில் வேடிக்கை என்னவென்றால், ஜனாதிபதி சந்திரிகாவின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை தீவிரமாக எதிர்த்துக் குரல் எழுப்பும் அதே சக்திகள்தான் அமைச்சர் ரத்வத்த பதவி விலகக்கூடாதென ஆரவாரம் செய்தன.

இது சிங்கள – பௌத்த இனவாதிகள் தமிழ் மக்களுக்கெதிரான இனப் படுகொலை யுத்தத்தை நிறுத்தக் கூடாது. அதற்கு தகுதியான ஆள் அமைச்சர் ரத்வத்ததான் என்பதை தெளிவுபடுத்திவிட்டது.

ஒரு நாட்டின் சுதந்திரம் என்பது, எல்லோருக்கும் சொந்தமாக இருக்க வேண்டும். எல்லாக் குடிமக்களும் சுதந்திரத்தின் பயனை ஒரு சேர அனுபவிக்க வேண்டும். கவிச்சக்கரவத்தி பாரதியாரின் கவிதை வரிகளில் சொல்ல வேண்டுமென்றால், "எல்லாரும் ஓர் குலம்: எல்லாரும் ஓரினம். எல்லாரும் ஓர் நிரை. எல்லாரும் ஓர் விலை. எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்ற உணர்வு எல்லோர் உள்ளங்களிலும் நிரம்பி இருக்க வேண்டும்.

ஆனால், இலங்கைக்குக் கிடைத்த சதந்திரம் சிங்களவர்களுக்கு சுதந்திரமாகவும் தமிழ் மக்களுக்கு கொத்தடிமைத்தனமாகவும் அமைந்துவிட்டது. பெப்ரவரி 4இல் உலகத்தின் தலைநகரங்கள் எங்கிலும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் உணர்வு பூர்வமான எழுச்சிமிகு கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் இதனை மெய்ப்பித்துக் காட்டுவதாக இருந்தது.

சிறீலங்கா இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக சிங்கள மன்னர்களால் தொடர்ச்சியாக ஆளப்பட்ட நாடு. புத்தபிரான் மூன்றுமுறை கால் பதித்த புனித பூமி. கௌதம புத்தரால் ஊழிக்காலம் வரை ஆண்டு அனுபவிக்குமாறு முதிசமாகச் சிங்களவர்களுக்கு இந்திரன் உட்பட முப்பத்து முக்கோடி தேவர்கள் சாட்சியாக எழுதிக் கொடுக்கப்பட்ட காணியென்று சொல்லப்படுகிறது.

இதனை உறுதி செய்வதுபோலவே, ஜனாதிபதி சந்திரிகாவின் சுதந்திரதினப் பேச்சும், பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவின் சுதந்திரதினச் செய்தியும் அமைந்திருந்தன. ஜனாதிபதி சந்திரிகாவின் சுதந்திரதினப் பேச்சின் ஒரு பகுதி இப்படி அமைந்திருந்தது:

"There is no gain saying the fact that the quality of life has improved for the vast majority of our people. There has been cultural resurgence. We have made giant strides in the fields of education, health and culture and arts, the law, industry and technology."

"பெரும்பான்மை மக்களது வாழ்க்கைத் தரம் முன்னேறியுள்ளது என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது. பண்பாட்டுத்துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. கல்வி, உடல்நலம், பண்பாடு மற்றும் கலைகள், சட்ட, தொழில் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி இவை போன்ற துறைகளில் நாங்கள்

தொடர்ச்சி 15 ம் பக்கம்.....

www.tamilarangam.net



# அனைத்து ஒடுக்குமுறையிலிருந்தும் விடுதலை கிடைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்

- விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு

"இன்று அனைத்துலகப் பெண்கள் நாள். உலகப் பெண்களுக்கு எதிரான அரசியல், சமூக, பொருளாதார, ஆண் மேலாதிக்க ஒடுக்குமுறை போன்ற அனைத்திலும் இருந்து விடுபடுவதற்காக ஒன்றுபட்டு குரல் எழுப்பும் ஒரு புரட்சி நாள் இது. பெண்கள் விடுதலை பெறவேண்டிய தேவையையும், அவசியத்தையும் இன்றைய நாள் வலியுறுத்துகிறது.'' இவ்வாறு அனைத்துலகப் பெண்கள் நாளை (08.03.1998) முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "சிறீலங்கா அரசினால் திட்டமிட்ட வகையில் தமிழர் தாயகத்தில் பெருமளவில் இராணுவ நகர்வுகள் செய்யப்பட்டு, தமிழ் மக்கள் சொல்லொணா நெருக்கடிகளையும், மன உளைச்சல்களையும் அனுபவித்து கொண்டிருக்கும் இந் நிலையில், இந்த நாளை நாம் சந்திக்கிறோம். சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் ஏராளமான தமிழ் பெண்கள் தமது வாழ்க்கைத் துணைகளை இழந்தும், தொழில் முயற்சிகளை இழந்தும், இருப்பிடங்களை இழந்தும் அல்லல்படுகின்றனர். அதே நேரத்தில் காலம் காலமாகத் தொடர்ந்து வரும் சாதியம், மணக்கொடை, ஆண்மேலாதிக்கம் என்பனவும் இவர்களைத் தொடர்ந்து அழுத்தி வருகின்றன. வீட்டினுள்ளும், வெளியிலும் பெண்களின் தன்னியல்பான செயற்பாடுகளுக்கு இவை பெரும் அச்சுறுத்தல்களாக அமைகின்றன.

ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்டு வரும் பெண்ணினம், தன்னைப் பற்றிய தீர்மானங்களை எடுக்கக்கூட அனுமதிக்கப்படுவதில்லை. நமது தமிழ் சமூகத்தில் பெண்களுக்கு இப்பொழுது ஓரளவு பொருளாதார சுதந்திரம் இருந்தாலும் கூட தீர்மானங்களை எடுத்து, நிறைவு செய்யக் கூடிய செயற்பாட்டு அதிகாரங்களைக் கொண்ட பொறுப்புக்களை ஆற்றுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. குறைந்தளவு பெண்களே இத்தகைய பொறுப்புக்களை ஆற்றுகின்றனர். இவர்களைக் கூட, தம் வீட்டினுள்ளே தன்னியல்பான ஒரு தீர்மானத்தை எடுக்கவோ அதை நடைமுறைப்படுத்தவோ சமூகம் அனுமதி கொடுப்பதில்லை.

காலத்திற்கு காலம் ஒடுக்குமுறை வடிவத்தில் சிறுசிறு மாற்றங்கள் வந்துள்ளனவே தவிர பெண்கள் மீதான ஒடுக்குமுறை இன்னமும் முற்றாக ஒழிந்தபாடில்லை. இந்த இறுக்கமான சமூக கட்டமைப்புக்குள் தோற்றம் கண்டு வாழ்ந்து அதில் இருந்து வெளிவந்த பெண்கள்தான், தமிழர்களின் அரசியல் இலட்சியமான தமிழீழ தனியரசை உருவாக்குவதற்கான விடுதலைப் போரை முன்னெடுப்பதில் இன்று கணிசமான அளவு பங்காற்றி வருகின்றனர்.

இதுவரை நடந்த போரில் ஏராளமான ஈழத்தமிழ்ப் பெண்கள் தம் உயிர்களை ஈகம் செய்து இருக்கிறார்கள். இலட்சிய உறுதி கொண்ட இந்த வீராங்கனைகள் எமது கௌரவத்துக்கு உரியவர்கள். மண் விடுதலைக்காகப் போராடும் அதே வேளை, பெண் விடுதலைக்காகவும் உழைக்கும் இப்பெண்கள், ஏனைய பெண்களுக்கு முன்னோடியாக செயற்பட்டு வருகின்றனர். அனைத்து மக்களினதும் விடுதலைக்காக அவர்கள் தொடர்ந்து போராடி வருகின்றார்கள். அவர்களுடன் அணிசேர்ந்து நாமும் போராடுவோம் என, அனைத்துத் தமிழ் பெண்களும் இந்நாளில் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். பெண்களுக்கு எதிரான ஒருதலைப்பட்சமான அநீதிகளை எதிர்த்து அரசியல், சமூக, ஆண் மேலாதிக்கம் போன்ற அனைத்து ஒடுக்குமுறை வடிவங்களில் இருந்தும் விடுதலை பெற்றிட நாம் போராட வேண்டும். பிற பெண்களின் பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு, நமது நிலைகளையும் சமூக அமைப்புகளையும் மாற்றி அமைப்பதற்காக நாம் போராட வேண்டும். சாதாரண பெண் என்ற நிலையில் இருந்து சவால்களைச் சந்திக்கத் தயாரான பெண்ணாக மாறி, சாதனைப் பெண்ணாக வெற்றியை அடைவதற்குத்தான் நாம் போராட வேண்டும்.

ஒட்டு மொத்தமாக மனிதகுல விடுதலைக்கான போராட்டத்தின் ஒரு பகுதியாகவே பெண் விடுதலைக்கான போராட்டம் இருப்பதால், அனைத்து ஈழப் பெண்களும் புரட்சிப் பெண்கள் அமைப்பின் கீழ் அணிதிரண்டு போராட வேண்டும். நம் வாழ்வின் இயல்பு நிலையை தனது இராணுவ நடவடிக்கைகளினால் குழப்ப நினைக்கும் சிங்கள அரசை வெல்ல நாம் பால் வேறுபாடற்று ஓரணியில் திரண்டு போராட வேண்டும். விடுதலை கிடைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம் என்ற உறுதியை எடுக்க வேண்டும் என்று, அனைத்து தமிழர்களையும் இன்றைய நாளில் நாம் கேட்டுக் கொள்கிறோம்.".

# வீரமுனை கிராமத்தில் ஊர்காவல் படை செய்த இரட்டைப் படுகொலை

## தமிழர்களைக் கொல்வதற்காகவா ஊர்காவல் படை உருவாக்கப்பட்டது?

*- வீரமுனை மக்கள் கேள்வி*

04-01-1998 ஞாயிற்றுக்கிழமை இடி மின்னலுடன் மழை பொழிந்து கொண்டிருக்கிறது. இடையிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள். மக்களிடையே ஒருவித பீதி, பயம், பதற்றம். கடிகார முள் மு.ப. 4.00 மணியைக் காட்டுகிறது. -அதிகாலை நேரம்.

வீரமுனையிலுள்ள இராசையாவின் வீட்டுக் கதவு தட்டப்படுகிறது. சுற்றிவளைப்போ என்னவோ என்று எண்ணி, ஒருவித பதற்றத்துடன் கதவைத் திறக்கிறார் இராசையா என்ற அந்த 60 வயது முதியவர்.

திடீரென ஆயுதபாணிகளாக உள்நுழைந்த இருவர், நித்திரையிலிருந்த இரு சகோதரர்களை எழுப்பி சரமாரியாகச் சுட்டுவிட்டு சாவதானமாக வெளியேறியுள்ளனர்.

இச்சம்பவம் 04-01-1998 அதிகாலை 4.00 மணியளவில் வீரமுனையில் இடம் பெற்றிருக்கிறது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந் துறைப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ளதுதான் இந்த வீரமுனைக் கிராமம். சுமார் 600 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அனைவரும் தமிழர்களே.

1990இல் ஏற்பட்ட இன வன் முறையின்போது வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தில் கூடிய மக்களை சகட்டுமேனிக்கு சுட்டதில் ஸ்தலத்திலேயே 54 பேர் மாண்டதை தமிழ் உலகம் இன்னும் மறக்கவில்லை. அது மட்டுமல்ல, அடுத்தடுத்து நடந்த சுற்றிவளைப்பின்போது பிடிபட்ட 120 இளைஞர்கள் பஸ்ஸோடு கடத்தப்பட்டதும் அவர்களால் மறக்கப்படவில்லை. ஏன், அம்பாறை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சென்ற 15 வீரமுனைத் தமிழ் மக்களைக் கடத்திக் கொன்றதும் நினைவிலிருக்கிறது. இப்படி சொல்லொணாத வேதனைகள் பற்பல.

இத்தனை துன்ப, துயரங்களைச் சகித்த வீரமுனை மக்கள் மூன்று வருடகாலம் திருக்கோவில், காரைதீவு போன்ற பகுதிகளில் அகதி வாழ்க்கை வாழ்ந்தனர். பின்பு பலவித உத்தரவாதங்களோடு மீள்குடியேற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவத்திற்கு முதல் (ஆறு மணிநேரத்திற்கு முன்பாக) சனியன்று இரவு 9.30 மணிபோல் காவலுக்கு நின்ற ஊர்காவற்படை வீரர் முகமட் அலி பாரூக் (வயது 20) என்பவரை சுட்டுக்கொன்றதன் எதிரொலியாக அன்றிரவு பூராக ஒரே சரமாரியான வெடிச்சத்தம். அதேவேளை, பாரிய இடிமின்னலுடன் பலத்த மழையும் 'சோ'வெனப் பெய்துகொண்டிருந்தது. மக்களுக்கு ஒருவித பதற்றம், பீதி. அந்த ஊர்காவல் படைவீரர் பாரூக் சுடப்பட்ட ஆறு மணித்தியாலங்களில் வீரமுனையில் இரட்டைக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீரமுனை 3ஐச் சேர்ந்த இராசையா நவரத்தினம் (வயது 17). இவர் வீரமுனை ஆர். கே. எம். பாடசாலையில் ஆண்டு 9 பயிலும் மாணவன். மற்றவர் மூத்ததம்பி நித்தியானந்தன் (வயது 24). படித்துவிட்டு மேசன் வேலை செய்து வருபவர்.

இவர்கள் இருவரும் ஒன்றுவிட்ட சகோதரர்கள். சம்பவதினம் ஒரே வீட்டில் படுத்துறங்கியவர்கள். அதிகாலை திருவெம்பாவை ஊர்வலத்திற்குப் போவதற்காக உறங்கியவர்கள். மறுநாள் பிரேத ஊர்வலத்தில் போனது. வீரமுனைக் கிராமத்தையே முழுக் கவலைக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது. அது மட்டுமல்ல, ஒரு வித பாது காப்பின்மையால் பதற்றமும் பயமும் பீதியும் அவர்களிடத்தில் நிலவுகிறது.

பள்ளமும் மேடும்- சேறும் சகதியுமுள்ள பாதை. பாதை ஓரத்திலே கிடுகினால் ஒருவேலி. படங்குபோடப்பட்டிருந்தது. ஒரு சிறு குடிசை. அருகில் இரண்டறை மண்டபமுள்ள கல்வீடொன்று. முன்றலில் அழுது புலம்பும் மக்கள் கூட்டம்.

கொல்லப்பட்ட நித்தியானந்தன் என்பவரின் தகப்பனார் எஸ். மூத்ததம்பி (வயது 62),

"எனக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவர் பிடிபட்டுப்போய் காணாமல் போயிருந்தார். மற்றவர் நேற்று சுடப்பட்டவர். இப்போது எனக்குப் பிள்ளைகள் இல்லை. எனது மனைவி சம்பவம் நடந்த வீட்டில் எனது மகனுடன் படுத்திருந்தார். நான் இந்தக் குடிசையில் இருந்தேன். அன்று விடிய விடிய மழை கொட்டியது. எனக்கு நித்திரையே இல்லை. காரணம் வெடிச்சத்தங்கள். ஓடிச் சென்று பார்த்தேன். எனது மகனும் எனது மச்சாளின் மகன் நவரத்தினமும் இரத்தவெள்ளத்தில் கிடந்தனர். எனது கணிப்பின்படி ஊர்காவல்படையினரே இதனைச் செய்துள்ளனரென்று நம்புகின்றேன்" என்றார்.

பாடசாலை மாணவன் நவரத்தினத்தின் தந்தையார் பி. இராசையா (வயது 60) அழுதழுது கூறுகிறார்:

"எனக்கு எட்டுப் பிள்ளைகள். இவன்தான் (நவரத்தினம்) கடைசிப்பையன். ஆண்டு 9 படிக்கிறான். என்கண் முன்னாலேயே சுட்டுவிட்டார்களே"

சம்பவதினம் நானும் எனது மனைவியும் அவரது சகோதரியும் அவரது மகன் நித்தியானந்தனும் எனது மகன் நவரத்தினமும் படுத்து உறங்கிக் கொண்டிருந்தோம்.

விடிய விடிய ஊரை வளைத்து வெடிச்சத்தம். ஓயாத மழை. இருந்தும் சரியாகத் தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தேன். கோயில் மணிகேட்டால் ஊர்வலத்திற்குச் செல்ல மக்களை எழுப்ப வேண்டும் என்று நினைத்துக்கொண்டு படுத்தேன்.

அதிகாலை 4.00 மணியிருக்கும். எமது வீட்டுக் கதவு தட்டப்படுகிறது. "கதவைத் திற..." என்று தமிழில் குரல் கேட்டது.

விடிய விடிய வெடிச்சத்தம் கேட்டதுதானே, விடிய சுற்றி வளைப்போ என்றெண்ணி கதவைத் திறந்தேன். "எங்கட ஆக்களை துவக்கால் சுட்டவன் இங்கு வந்தானா?" என்று கேட்ட வண்ணம் இருவர் உள்ளே வந்தனர்.

காக்கி உடையுடுத்து, தொப்பி அணிந்திருந்தனர். கையில் துவக்கு இருந்தது. ஊர்காவல் படையினர் போல் இருந்தது. அவர்கள் மறுகணம், நித்திரையிலிருந்த சகோதரர்கள் இருவரையும் எழுப்பினர். மறுகணம் சரமாரியாகச் சுட்டனர். இருவரும் இரத்த வெள்ளத்தில் மிதந்தனர். அவர்கள் போய்விட்டனர். அவர்களது ஆட்சி. எம்மைக் கேட்பார், பார்ப்பார் இல்லை. நாயைச் சுடுவதுபோன்று சுட்டுவிட்டுப் போயிற்றானுகள். நான் என்ன செய்ய?" என்று ஒப்பாரிவைத்து அழுகிறார்.

மரணவீட்டில் நின்ற சி. மாணிக்கம் (வயது73) என்ற வயோதிபர்:

"பொழுதுபட்டால் எப்போது விடியுது என்று எதிர்பார்த்தவண்ணம் எமது மக்கள் பயம், பீதியுடன் காலத்தைக் கடத்துகின்றனர். ஆனால், இப்படி படுத்த பிள்ளைகளை எழுப்பி, சுட்டுவிட்டுப் போகும் படுபாதகர்களை விட்டு வைக்கக்கூடாது. தமிழர்களைக் கொல்வதற்காகவா ஊர்காவல் படை உருவாக்கப்பட்டது?

பாதுகாப்புத் தருகிறோம் என்று கூறித்தான் எம்மை மீள்குடியேற்றினார்கள். ஆனால், இன்று நடந்ததென்ன? யாரை நம்புவது?" என்று கேள்விக்கு மேல் கேள்வி கேட்டார் அவர். ✳

www.tamilarangam.net



# போராட்டம் மூலமே தேச விடுதலையையும் பெண் விடுதலையையும் வென்றெடுக்க முடியும்

**-தமிழீழத் தேசியத் தலைவர்**

(அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு 08.03.93 அன்று தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் விடுத்த அறிக்கையிலிருந்து.....)

காலம் காலமாக தூங்கிக் கிடந்த பெண்ணினம் இன்று விழிப்படைந்து, எமது போராட்டத்தின் ஒரு புரட்சிகர சக்தியாக எழுச்சி கொண்டு நிற்கிறது.

வீரத்திலும் தியாகத்திலும் விடுதலை யுணர்விலும் ஆண்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்கள் இல்லை என்பதை, எமது பெண் போராளிகள் தமது வீர சாதனைகள் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

ஒரு புதுமைப் பெண்ணை, ஒரு புரட்சிகரப் பெண்ணை எமது விடுதலை இயக்கம் படைத்திருக்கிறது.

தமிழீழத்தில் இந்தப் பெண் புரட்சி தொடர வேண்டும். மேலும் மேலும் புரட்சிப் பெண்கள் எமது விடுதலை இயக்கத்தின் பின்னால் அணிதிரள வேண்டும். போராட்டம் மூலமாகவே நாம் தேச விடுதலையையும் பெண் விடுதலையையும் வென்றெடுக்க முடியும்.

நாம் ஒரு சாதாரண் சூழலில் ஒரு சாதாரண வாழ்க்கையை வாழவில்லை. நாம் ஒரு போராட்ட சூழலில் வாழ்கிறோம். போராடினால்தான் எமக்கு வாழ்வுண்டு, விடிவுண்டு, வருங்காலம் உண்டு என்று நெருக்கடியான நிர்ப்பந்தத்துக்குள் வாழ்கின்றோம். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் போராட்டமே எமது வாழ்க்கையாகவும் வாழ்க்கையே எமது போராட்டமாகவும் மாறிவிட்டது. இந்த எதார்த்தமான வரலாற்று நிர்ப்பந்தத்திலிருந்து யாருமே தப்பிக்கொள்ள முடியாது. அப்படித் தப்பித்துக் கொள்ள முனைபவர்கள் தேசாபிமானம் கொண்டவர்கள் அல்லர்.



# உலகப் பெண்ணினத்திடம் ஒரு வேண்டுகோள்!

அனைத்துலகப் பெண்கள் தினத்தை (08-03-98) முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.

தவிர்க்க முடியாத வரலாற்று நிர்ப்பந்தமாக யாழ். குடாநாட்டிலிருந்தும் தென் தமிழீழத்தில் இருந்தும் இடம்பெயர்ந்த மக்கள் இன்றும் ஏதிலிகளாக தங்ககங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அரசின் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் நோக்கத்தை தமது இடப்பெயர்வின் மூலம் தோற்கடித்த யாழ். குடாநாட்டு மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான ஆக்க பூர்வமான வேலைகள் வன்னியில் தொடரப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தொடர்ந்து இடம்பெறும் இராணுவ ஆக்கிரமிப்பினாலும் அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களினாலும் தமது குடியிருப்புக்களைவிட்டு இடம்பெயர்ந்து காடுகளில் தஞ்சமடைந்துள்ள தென்தமிழீழ மக்களையும் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் குடியேற்றவேண்டிய தேவையும் தொடர்கின்றது. இடம் பெயர்ந்த இம்மக்களுக்கான வீடுகளை அமைத்து, காணிகளைக் கொடுப்பதன் மூலம் இவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதே இன்றைய அவசர தேவையாகவுள்ளது.



ஆனால், தனது இராணுவ நடவடிக்கையின் நோக்கம் இம் மக்களின் இடப்பெயர்வால் சிதைந்து போனதால் ஆத்திரமுற்று அரசு இடம்பெயர்ந்தோரை மீளக் குடியேற்றும் திட்டத்துக்குப் பலத்த முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகிறது. அரசின் இந்தத் தடைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் 'முகாம்வாழ்வு' தொடர்ந்து கொண்டு போவதால் பல புதிய நெருக்கடிகள் எழுந்துள்ளன.

ஒரே இடத்தில் ஏராளமான மக்கள் குவிந்துள்ளதால் எல்லோராலும் தமக்கு அண்டிய பகுதிகளில் வேலை வாய்ப்புக்களைத் தற்காலிகமாகவேனும் பெற்றுக் கொள்வது இயலாததாகவே உள்ளது. தமக்கென நிரந்தரமான குடியிருப்புக்கள் கிடைக்கும்வரை எங்கேயுமே எந்த வேலையிலுமே முழுமையாக ஈடுபடும் மனநிலை யாரிடமே இராது. இதனால், முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உழைப்பில்லை. அவர்களது வாழ்விடமும் முகாம்தான். பொழுது போக்கிடமும் முகாம்தான். எந்த வேலையுமற்ற உழைப்பாளர் கூட்டமொன்று சும்மா இருக்கும்போது அவர்களிலிருந்து சமூக விரோதிகள் தோன்றும் நிலை இயல்பாக உருவாகும். இதேபோல பெண்களின் பிரச்சினைகளும் ஏராளமாகியுள்ளன.

பெண்களுக்கென்று பிரத்தியேகமான பிரச்சினைகள் உண்டு. அவர்களது தேவைகளை நிறைவு செய்வதற்கு தனிப்பட்ட வசதி, வாய்ப்புக்கள் இல்லையென்றால் அவர்களால் இயல்பான வாழ்வினை வாழமுடியாமல் போய்விடும். இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மக்கள் இருப்பதற்கே இடமில்லாத நெருக்கடிக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும்போது, அதற்குள் பெண்களுக்கென தனியான தேவைகளை நிறைவு செய்யும் வாய்ப்பு கிடைப்பது சாத்தியமற்றது. பொதுவான குளிக்கும் இடங்களும் எல்லோருடைய பாவனைக்குமுரியதாக இருக்கும் மலசல கூடங்களும் பெண்களின் சுதந்திரமான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்றன.

உழைப்பில் ஈடுபடாத யுவதிகள், இளைஞர்கள் கூட்டம் ஒன்றாக ஒரே முகாமில் தொடர்ச்சியாக வாழ்ந்து வருவதால், சமூக சீர்கேடுகள் அதிகரிக்கும் சூழ்நிலை தோன்றியுள்ளது. இளவயதுத் திருமணங்கள் அதிகரித்துள்ளன. காதலித்தபின், காதலித்து தாய்மையடையச் செய்தபின் ஏமாற்றுதல் போன்ற பிரச்சினைகள், பெற்றோரை எதிர்த்து தான் விரும்பிய உழைப்பில்லாத இளைஞனை மணம் முடித்தபின் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்குப் பொருளாதார பலம் இல்லாததால் பெண்களுக்குள் எழும் மன அழுத்தங்கள், நெருக்கடியான சூழ்நிலை காரணமாக குழந்தைகளை சரியாக வழிநடத்த முடியாமை என்று பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. போசாக்கின்மையால் இறக்கும் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மாரின் வீதமும் அதிகரிக்கும் நெருக்கடி எழுந்துள்ளது. இவை இன்று ஒவ்வொரு முகாம்களினதும் பிரச்சினையாக இருந்தாலும், நாளை தமிழீழத்தின் பிரச்சினையாக மாறப்போறவையும் இப் பிரச்சினைகளேதான். நாளை எதிர்காலத்தைப் பாதிக்கப்போகும் இப் பிரச்சினைகளைக் களைவதற்கு 'அகதிமுகாம் வாழ்வை' இல்லாததாக்க வேண்டும். அதற்கான தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ள அனைத்துப் பொது நிறுவனங்களுமே அரசின் முட்டுக் கட்டைகளை எதிர்நோக்குகின்றன.

உலகப் பொது அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கூட, சிறீலங்கா அரசு கட்டுப்படுத்த முனைகிறது. வடக்கு – கிழக்கு நிவாரணப் பணிக்கென வெளிநாடுகளிலிருந்து வரும் பண உதவிகளையெல்லாம் தான் பெற்றுக் கொண்டு, தனது இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகிறது.

இதேவேளை, தான் உண்மையாகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்கிறேன் என உதவி செய்யும் நாடுகளுக்குக் காட்டுவதற்காக சில கண்துடைப்பு பணிகளிலும் அரசு குறைவில்லாமல் ஈடுபட்டு வருகின்றது.

'அரசின் இந்த அலட்சியப் போக்கினால் பெருமளவு சிக்கல்களை இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் தமிழ்ப் பெண்கள் எதிர்கொள்கிறார்கள். எனவே அவர்களுக்காக, அவர்களின் நலன்களுக்காக, அவர்களின் எதிர்கால வாழ்வுக்காக உரத்த குரல் எழுப்புங்கள்' என்ற வேண்டுகோளை 1998 இன் அனைத்துலகப் பெண்கள் நாளிலே உலகப் பெண்ணினத்திடம் விடுக்கின்றோம். குறிப்பாக, புலம் பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெண்களிடமும் தமிழீழப் பெண்கள் இவ் அவசரமான வேண்டுகோளை விடுக்கின்றார்கள்.

உலகப் பெண்ணினம் ஒன்றுபட்டு, சிறீலங்கா அரசுக்கு கொடுக்கும் அழுத்தமும் நிர்ப்பந்தமுமே இடம்பெயர்ந்த மக்களுக்கு, குறிப்பாக தமிமீழப் பெண்களுக்கு ஒரு நிரந்தர நல்வழியைக் காட்டும். ✳

பெண்களுக்கென்று பிரத்தியேகமான பிரச்சினைகள் உண்டு. அவர்களது தேவைகளை நிறைவு செய்வதற்கு தனிப்பட்ட வசதி, வாய்ப்புக்கள் இல்லையென்றால் அவர்களால் இயல்பான வாழ்வினை வாழமுடியாமல் போய்விடும். இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மக்கள் இருப்பதற்கே இடமில்லாத நெருக்கடிக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும்போது, அதற்குள் பெண்களுக்கென தனியான தேவைகளை நிறைவு செய்யும் வாய்ப்பு கிடைப்பது சாத்தியமற்றது. பொதுவான குளிக்கும் இடங்களும் எல்லோருடைய பாவனைக்குமுரியதாக இருக்கும் மலசல கூடங்களும் பெண்களின் சுதந்திரமான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்றன.

# -1997-

# ஒரு வருடப் போரும் அரசியலும்



ஆனையிறவு – பரந்தன் மீதான பெருந்தாக்குதலுடன் (ஜன–9) ஆரம்ப மான கடந்த போராண்டு, மன்னகுளம் அதிரடியுடன் (டிச–4) முடிவடைந்துள்ளது.

இந்தப் போராண்டின் கதாநாயகனாக ஜெயசிக்குறுய் விளங்குகின்றது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றப் படையினர் நடாத்திய சூரியக்கதிர் நடவடிக்கையுடன் – தமிழர் நிலத்தில் – மரபுப்போர் தீவிரம் பெற்றிருந்தது. எனினும், கடந்த போராண்டின் 8 மாதங்களை விழுங்கிய ஜெயசிக்குறுய் சமர், 1997க்கு ஒரு வரலாற்று இடத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளது. அதாவது தமிழீழ விடுதலைப் போராட்டம் சந்தித்த முதலாவது பாரிய மரபுப் போர் ஆண்டாக, கடந்த போராண்டு இடம் பிடித்துள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக கெரில்லாப் போர் முறையின் முடிசூடா மன்னர்களாக விளங்கிவரும் புலிவீரர்கள், ஜெயசிக்குறுயிக்கு எதிரான சமரில் காட்டிவரும் போர்த்திறமை காரணமாக, மரபுப்போர் முறையிலும் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளனர்.

பரந்து – விரிந்த இந்த மரபுப்போர் அரங்கினுள் கெரில்லாப்பாணியில் நுழைந்து – படையினரின் பிரதான நிலைகள் மீது பெரியளவிலான தாக்குதல்களைத் தொடுத்த ஒரு உயர் இராணுவ பரிமாணத்தையும் கடந்த போராண்டில் புலிகள் சாதித்துள்ளனர்.

## போர் இழப்புக்கள்

மரபுப்போர் முறையில் சண்டைகள் நிகழ்ந்துள்ளதாலும் – இராணுவம் கடைப்பிடித்த அதி உயர் விழிப்பு நிலையின் மத்தியில் புலிகளின் தாக்குதல்கள் இடம்பெற்றதாலும் அதிகளவு உயிரிழப்புகளைக் கண்ட வருடமாக 1997 திகழ்ந்துள்ளது.

இந்தத் தனியாண்டில் மட்டும் 3,500ற்கும் மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர். சுமார் 8000 படையினர் காயமடைந்துள்ளனர். இதேவேளை, தமிழீழத்தின் அனைத்துப் போரரங்குகளிலும் இடம்பெற்ற சண்டைகளில், ஏறக்குறைய 1,400 புலிவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். சுமார் 1,000 புலிவீரர்கள் காயமடைந்துள்ளனர்.

1995இல் யாழ்ப்பாணம் ஆக்கிரமிக்கப்பட்ட மகிழ்ச்சியிலும் – 1996இல் கிளிநொச்சி கைப்பற்றப்பட்ட சந்தோசத்திலும் இருந்த சிங்களப்படை, 1997ஆம் ஆண்டை ஒரு இலட்சிய ஆண்டாக வரித்திருந்தது.

அதாவது, தமிழர் சேனையாகிய புலிப்படைக்குச் சமாதி கட்டும் சாதனை வருடமாக 1997ஆம் ஆண்டைச் சிங்கள இராணுவவாதிகள் நிர்ணயித்திருந்தனர். அத்துடன், குடாநாட்டிற்கு ஒரு தரைப்பாதை அமைத்து, வடக்கைத் தெற்குடன் இணைத்து, வெற்றி விழாக் கொண்டாடவும் பேரினவாதிகள் ஆசைப்பட்டனர்.

ஆனால், இந்தப் பாதை அமைப்புத் திட்டத்தை சிங்களப் படைகள் ஆரம்பிக்க முன்னரே பரந்தன் – ஆனையிறவு தளப்பகுதி மீது புலிகள் ஒரு அதிரடித் தாக்குதலை நடாத்தி படைக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்திருந்தனர்.

இந்தப் பெருந்தாக்குதலில் 300 படையினர் கொல்லப்பட்டிருந்தனர். ஒன்பது ஆட்லறிகளும் – பல்லாயிரம் எறிகணைகளைக் கொண்ட களஞ்சியங்களும் தாக்குதலில் எரியுண்டு போனது. இராணுவக் கற்பனையில் மூழ்கிக்கிடந்த படைத் தலைமைக்கு இந்த வியப்பூட்டும் அதிரடி, புலிகளின் பலத்தை நினைவூட்டியது. அத்துடன் பாதை அமைப்பு முயற்சி சந்திக்கப்போகும் எதிர்ப்பின் தீவிரத்தையும் இது உணர்த்திமிருந்தது.



இந்த நிலையில், புலிகளின் போர்வலுவைக் குறைத்து விட்டு – அதன் பின்னர் – பாதை அமைப்பு முயற்சியைத் தொடங்க இராணுவத் தலைமை விரும்பியது. 'எடிபல' இராணுவ நடவடிக்கை அத்தகைய நோக்கத்திற்காகவே ஆரம்பிக்கப்பட்டது. மன்னார் மாவட்டத்தை ஊடறுத்து பாதை அமைப்பது போல பாசாங்கு காட்டி – புலிகளை சமருக்கிழுக்க படைத்தலைமை முயன்றது.

## தந்திரோபாயப் பதிலடி

சிங்களப்படைத் தலைமையின் திட்டத்திற்கமைய சமரை நடாத்த தலைவர் பிரபாகரன் முனையவில்லை. 'எடிபல'வுக்கு எதிராக சமர்த்தவிர்ப்புத் தந்திரோபாயத்தைக் கைக்கொண்ட தலைவர் அவர்கள், படைத்தலைமையின் தந்திரோபாயப் போர்த்திட்டத்திற்குப் பதிலடி கொடுத்தார். 'எடிபல' களமுனையை விட்டு, புலிவீரர்களை விலகியிருக்கச் செய்தார். இதனால், புலிகளின் போர் வலுவைக் குறைத்தல் என்ற இராணுவ நோக்கம் ஈடேற வில்லை. ஆயினும், சமர் தவிர்ப்பின் மூலம் புலிகள் பெற்ற தந்திரோபாய வெற்றியை மழுங்கடிப்பதற்காக 'எடிபல' நடவடிக்கையை, படைத்தலைமை ஒப்புக்காக நடாத்தி முடித்தது.

புலிகளின் படைபலம் தொடர்பாக படைத்தரப்பில், அண்மைக்காலத்தில் – இருவேறு கருத்துக்கள் உலாவுகின்றன. யாழ்ப்பாணச் சமருக்குப் பின்னர் புலிகளின் இராணுவ பலம் ஒடுக்கப் பட்டுவிட்டது என்று ஒரு பகுதியினர் நம்புகின்றனர். இந்த வலைக்குள் ரத்வத்தவும் அடங்குகின்றார். ஆனால், மறுபகுதியினர் அவ்விதம் நம்பவில்லை. பெரும்பாலான களமுனைத் தளபதிகள் இந்த இரண்டாவது வகைக்குள் அடங்குகின்றனர்.

எடிபலவை எதிர்கொள்ளாது, புலிகள் தவிர்த்ததை – முதல் வகையினர் தமது கருத்திற்கு ஆதாரமாக எடுத்து, தரைப்பாதை திறப்பிற்கான இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க முடிவெடுத்தனர். ஜெயசிக்குறுய் தொடங்கியது. இவ்விதம், புலிகள் பற்றிய தப்பான கணிப்புடன் பாதை அமைப்பு முயற்சி ஆரம்பமானது.

வவுனியா – கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்றி குடாநாட்டிற்குத் தரைப்பாதை அமைப்பதே சந்திரிகா அரசாங்கத்தின் உண்மையான திட்டம். இந்தத் திட்டமானது, விநியோகப் பாதை அமைப்பிற்கும் அப்பால் வெறும் சில இராணுவ நோக்கங்களைக் கொண்டிருக்கின்றது. புலிகளை அழித்துத் தமிழரது ஆயுதப் போராட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பது அதில் இறுதியானது.

படையினர் நடாத்திய 'ரிவரச' மற்றும் 'சத்ஜய' இராணுவ நடவடிக்கைகளாலும்,

www.tamilarangam.net





புலிகள் தொடுத்த 'ஓயாத அலைகள்' மற்றும் 'பரந்தன் - ஆனையிறவு தளப்பகுதி மீதான தாக்குதல்' என்பனவற்றாலும் தனது ஆட்பலத்தின் பெரும்பகுதியை புலிகள் இயக்கம் இழந்துவிட்டது என்று படைத் தலைமை கணித்திருந்தது.

இந்த நிலையில், புலிகளின் நடவடிக்கை மையமான வன்னியின் இதயப் பகுதியூடாக ஒரு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து - புலிகளை நேரடிச் சண்டைக்கு இழுத்து - அவர்கள் மீது பெருமளவு படைக்கல சக்தியை பிரயோகித்து - உயிரிழப்புகளை உண்டுபண்ணி - புலிகளின் எஞ்சிய மரபுப் போர்ப் பலத்தையும் உடைத்து - புலிகள் இயக்கத்தை ஒரு கெரில்லாக் குழுவாக உருமாற்றி விடும் இராணுவத் திட்டத்துடன் - சந்திரிகா அரசாங்கம் உள்ளது. இவ்விதம் செய்துவிட்டு, கைப்பற்றிய வவுனியா - கிளிநொச்சி நெடுஞ்சாலையை அரணாகவும் - புறப்படு தளமாகவும் பயன்படுத்தி நெடுஞ்சாலையின் கிழக்குப் பகுதி மீதும் (முல்லைத்தீவுப் பக்கம்) - மேற்குப் பகுதி மீதும் (மல்லாவி - அக்கராயன் பக்கம்) தனித்தனியாகப் படையெடுப்புக்களை நடாத்தி புலிகளை அடியோடு துடைத்தெறிந்துவிட வேண்டும் என்ற இறுதித் திட்டமும் இராணுவத்தின் போர்த்திட்டத்தில் உள்ளது.

## ஆப்பிழுத்த குரங்கு

ஆனால், சிங்கள அரசாங்கம் விரும்பியது போல அதனது இராணுவத் திட்டம் பலிக்கவில்லை. நடவடிக்கைப் படையினர் மீது, புலிகள் தொடுத்த பாரிய தாக்குதல்களும் மற்றும் மூன்று மாத காலம் கடுமையாக நடந்த புளியங்குள சண்டைகளும் ஜெயசிக்குறுய் படையினரை நிலைதடுமாற வைத்துவிட்டது. இப்போது, தான் விரித்த இராணுவ வலைக்குள் தனது துருப்புக்களையே சிக்க வைத்துத் திண்டாடிக் கொண்டிருக்கின்றது.

புலிகளின் மரபுப் போர்ப்பலத்தை அடியோடு துடைத்தெறியும் இலக்கைக் கொண்ட ஜெயசிக்குறுயில், சிங்களத்தின் மரபுப் போர்ப்பலமே சிதைவுண்டு வருகின்றது. 1997இன் முக்கிய இராணுவ அம்சங்களில் இதுவுமொன்றாகும். தனது பேரினவாத இலட்சியம் ஈடேறப்போகும் ஆண்டென்று சிங்கள அரசு நம்பிய 1997ஆம் ஆண்டு, அதற்குப் பாரிய இராணுவ நெருக்கடியைக் கொடுத்த சிக்கல் ஆண்டாக அமைந்துவிட்டது.

**உருப்படியான தீர்வுத் திட்டமொன்றை, தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற்க – சந்திரிகா அம்மையார் அவர்களோ – தமிழரின் தேசிய அபிலாசைகளைக் கொன்று – புதைக்கும் சூழ்ச்சித்திட்டத்தைக் கொண்ட நிர்வாக முறைமைகளை, அரசியல் தீர்வுத் திட்டம் என்று பெயர் சூட்டி வெளியிட்டார்.**

## இடப்பெயர்வு அவலம்

கடந்த மூன்று ஆண்டுகளாகப் போர் மேகம் வட தமிழீழத்தில் மையங் கொண்டுள்ளது. சண்டைகளின் தீவிரம் காரணமாக சிங்களத் துருப்புக்களின் பெரும்பகுதி வடபுலப் போர் முனையிலேயே கட்டுண்டு கிடக்கின்றது.

இதனால், தென்தமிழீழப் போர் அரங்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை நடாத்த முடியாத சூழலில் சிங்கள அரசு உள்ளது. இந்த யதார்த்த நிலை காரணமாக, தென் தமிழீழ மக்கள் கடந்த 10 வருடங்களாகச் சந்தித்த இடப்பெயர்வு அவலம், கடந்த மூன்று வருடங்களில், பெருமளவு குறைந்துள்ளது. அதேசமயம், வடபுல மக்கள் இடப்பெயர்வுப் பூகம்பத்திற்குள் சிக்கியுள்ளனர். கடந்த ஆண்டிலும் இந்த அவலம் தொடர்ந்துள்ளது.

கடந்த போராண்டில் 'எடிபல' நடவடிக்கையால் மன்னார் மாவட்டத்தின் பெரும்பகுதிக் கிராமங்கள் மீண்டும் இடப்பெயர்வைச் சந்தித்தன. அதுபோல, ஜெயசிக்குறு நடவடிக்கையால் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் கணிசமான தொகைக் கிராமங்கள் இடம்பெயர்ந்துள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும்பகுதிக் கிராமங்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில் இடம்பெயராத கிராமங்கள் என்று வடதமிழீழத்தில் - ஒரு சில ஊர்களை மட்டுமே குறிப்பிட்டுச் சொல்லமுடியும். அந்தளவுக்கு இடப்பெயர்வுச் சூறாவழியால் வடதமிழீழம் உலுக்கியெடுக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த இந்த மக்கள், உணவு நெருக்கடிகளாலும் - மருத்துவப் பற்றாக்குறைகளாலும் மிகவும் துன்பப் படுகின்றனர். அடைமழை இந்த வாழ்வியல் துன்பத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. அரசின் பொருளாதாரத் தடையும் - மனிதாபிமானப் பொருட்கள் வந்து சேர்வதில் சிங்கள அரசு கடைப்பிடிக்கும் இனவாதப்போக்கும் இடம்பெயர்ந்த மக்களின் துயரத்தை இரட்டிப் பாக்கியுள்ளது.

தீவிரமான போர் ஒன்றிற்கு முகங்கொடுத்தபடி - புலிகள் இயக்கம் - தன்னால் முடிந்தளவுக்கு இடம் பெயர்ந்த மக்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவி வருகின்றது.

## 1997 இன் முக்கிய சண்டைகள்

| | | |
|---|---|---|
| ✳ | 09.01.97 | பரந்தன் - ஆனையிறவு மீதான தாக்குதல் |
| ✳ | 13.05.97 | ஜெயசிக்குறுய் ஆரம்பம் |
| ✳ | 24.05.97 | இறம்பைக்குளச் சண்டை (3 ராங்க் அழிப்பு) |
| ✳ | 10.06.97 | தாண்டிக்குளம் மீதான தாக்குதல் |
| ✳ | 24.06.97 | ஓமந்தை - பெரியமடு தாக்குதல் |
| ✳ | (சுமார் 3 மாதங்கள்) | புளியங்குளச் சண்டைகள் |
| ✳ | 05.10.97 | கரப்புக்குத்தி - விஞ்ஞானகுளம் தாக்குதல் |
| ✳ | 04.12.97 | மன்னகுளம் சண்டை |

## பேரினவாதத்தின் புதிய வியூகம்

முழுமையான முறையில் ஒரு போரை நடாத்திக்கொண்டிருக்கும் சந்திரிகா அம்மையாரை ஒரு இராணுவவாதியென்று சரியாக அழைப்பதற்குப் பதிலாக, சமாதானத் திற்காகப் பாடுபடும் ஒரு ஆட்சியாளர் என்று, மேற்குலக நாடுகள் தவறாக அழைக்கின்றன.

அம்மையாரின் சாதுரியச் செயற்பாடுகளும் - பேச்சுக்களும் அத்தகையதொரு தவறான புரிதலை, சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்தியுள்ளது. இனப்பிரச்சினை என்ற ஒன்றே இந்த நாட்டில் இல்லை என்ற ஐ. தே. க அரசாங்கங்களின் கருத்திற்கு முரணாக, நாட்டில் இனப்பிரச்சனை உண்டு என்றும் தமிழ்மக்களுக்கு அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன என்றும் அம்மையார் அடிக்கடி கருத்து வெளியிடுவார். இதுபோல, தென்னாசியாவின் முதன்மை நூலகமான யாழ் நூலகத்தை தாம் எரிக்கவில்லையென்று ஐ. தே. கட்சித் தலைமை மறுதலித்துக் கொண்டிருக்க - ஐ. தே. க அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் சிங்களப் பொலிசாரே எரித்தனர் என்றும் அம்மையார் குற்றஞ்சாட்டியிருந்தார்.



எல்லாவற்றிற்கும் மேலாக, 17 வருட ஐ. தே. க ஆட்சியில் வெளியிடப்படாத ஒரு 'அரசியல் தீர்வுத் திட்டத்தை' - தனது மூன்று வருட ஆட்சிக்காலத்தில் வெளியிட்டுவிட்டதாக தம்பட்டமும் அடிப்பார்.

ஒரு யதார்த்த பூர்வமான ஆட்சியாளராக அம்மையாரை சர்வதேசம் கருதியதற்கு மேற்குறித்த வகையில் அமைந்த அவரது வார்த்தைகளும் செயல்களும் முக்கிய காரணிகளாகும்.

எனினும், நீதிக்காகக் குரல் கொடுப்பது போல வாயால் கதைத்துக்கொண்டு, ஐ. தே. கட்சி அரசாங்கத்தைவிட மிகக் குரூரமான வகையில் செயலில் ஈடுபட்டார்.

தமிழருக்கு இனப்பிரச்சினை உண்டு என்று கூறிய அம்மையார், அதைத் தீர்த்து வைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததும், அவர் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை.

1981இல் அழிக்கப்பட்ட யாழ் நூலக எரிப்பை கண்டனம் செய்த அம்மையார், 1995இல் யாழ்ப்பாணம் மீது குண்டுமழை பொழிய உத்தரவிட்டு, யாழ்ப்பாண மக்களையே இடம் பெயர்ந்தோடச் செய்தார்.

உருப்படியான தீர்வுத் திட்டமொன்றை, தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற்க - சந்திரிகா அம்மையார் அவர்களோ - தமிழரின் தேசிய அபிலாசைகளைக் கொன்று - புதைக்கும் சூழ்ச்சித் திட்டத்தைக் கொண்ட நிர்வாக முறைமைகளை, அரசியல் தீர்வுத் திட்டம் என்று பெயர் சூட்டி வெளியிட்டார்.

சிங்கள - தமிழ் இனப்பிரச்சினையைக் கூர்மையடையச் செய்வித்தது, ஐ. தே. கட்சி அரசாங்கம்தான் என்று சுட்டுவிரல்

தொடர்ச்சி .10 ம் பக்கம்.......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# 1997 - ஒரு வருடப் போரும்....

நீட்டிக்கொண்டு – தனது 4வருட ஆட்சியில், இந்தத் தீவில் இரத்த ஆறு ஓடச்செய்தபடியுள்ளார். இனப் பிரச்சினையை படுமோசமான முறையில் இடியப்பச் சிக்கலாக்கியுள்ளார். 17 வருடகாலமாக ஐ. தே. கட்சி அரசு தமிழினத்திற்குச் செய்த கொடுமையை சந்திரிகா அரசாங்கம் 4 வருடத்தில் செய்துள்ளது.

தமிழ் மக்களை விடுவிக்க என்று

17 வருடகாலமாக் ஐ. தே. கட்சி அரசு தமிழினத்திற்குச் செய்த கொடுமையை சந்திரிகா அரசாங்கம் 4 வருடத்தில் செய்துள்ளது.

கூறிக்கொண்டும் – சமாதானத்திற்காக யுத்தம் என்று சொல்லிக்கொண்டும் தமிழ் மக்கள் மீது ஆக்கிரமிப்புப் போரை தொடுத்துள்ள அம்மையாரின் அரசாங்கம் தமிழர்களை அவர்களது சொந்த மண்ணிலேயே இன அழிப்புச் செய்து வருகின்றது. அழிவையும் – அவலத்தையும் வேரோடு பிடுங்கியெறியப் பாடுபடப்போகின்றேன் என்று பிரகடனம் செய்த அம்மையார், இன்று தமிழர் நிலத்தில் அழிவையும் – அவலத்தையுமே விதைத்து வருகின்றார்.

## சந்திரிகா அலையின் அந்திமம்

இதேவேளை, அம்மையாரின் அரசாங்கத்திற்கிருந்த முன்னைய சர்வதேச அங்கீகாரம், இப்போது மங்கத்தொடங்கியுள்ளது. சிங்களப் படைகளால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெறும் படையினரின் பாலியல் வல்லுறவுகளும் அவர்களால் கைதாகிக் காணாமல் போதலும் – மற்றும் விடுவிக்கப்பட்ட மக்களின் சோதனைச் சாவடி வாழ்க்கைப் பயணமும், அம்மையாரது ஆட்சியின் சுயரூபத்தை சர்வதேசத்திற்கு உணர்த்தியுள்ளன.

இந்த வகையில், சந்திரிகா அம்மையாரின் – உண்மை முகத்தை – பேரினவாத குணத்தை சர்வதேசம் புரிந்துகொள்ள அடியெடுத்துக் கொடுத்த ஆண்டாக கடந்த போராண்டு திகழ்ந்துள்ளது. இந்த மாற்றம் புதிய ஆண்டில்(98) மேலும் வளர்ந்து தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் சர்வதேசச் சூழல் உருவாக வழியேற்படலாம்.

## தலைவரின் அரசியல் செய்தி

இதேவேளை, கடந்த போராண்டின் இறுதிப்பகுதியில் தலைவர் பிரபாகரன் விடுத்த அரசியல்செய்தி உலகின் மனச்சாட்சியை உறுத்தியிருக்கும். சந்திரிகா அரசு மட்டுமல்ல, கடந்த 50 வருடங்களாக சிங்கள அரசாங்கங்கள் புதைகுழிகளை உழுதெறிந்து – அழித்த சந்திரிகா அரசாங்கத்தின் ஈனச்செயலை தலைவர் அம்பலப் படுத்தியிருந்தார். காட்டுமிராண்டித் தனமான இந்த இழிசெயல், சந்திரிகா அம்மையாரின் தமிழின வெறியை உலகிற்குப் புலப்படுத்தியிருக்கும்.

இவ்விதம், வாழ்வியல் ரீதியாக

அம்மையாரின் அரசாங்கத்திற்கிருந்த முன்னைய சர்வதேச அங்கீகாரம், இப்போது மங்கத்தொடங்கியுள்ளது. சிங்களப் படைகளால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெறும் படையினரின் பாலியல் வல்லுறவுகளும் அவர்களால் கைதாகிக் காணாமல் போதலும் – மற்றும் விடுவிக்கப்பட்ட மக்களின் சோதனைச் சாவடி வாழ்க்கைப் பயணமும், அம்மையாரது ஆட்சியின் சுயரூபத்தை சர்வதேசத்திற்கு உணர்த்தியுள்ளன.

எவையுமே தமிழருக்கு நீதிவழங்க முனையவில்லை என்ற வரலாற்று உண்மையை அந்தச்செய்தியில் தலைவர் எடுத்து விளக்கியிருந்தார். இந்த உண்மையைப் புரிந்துகொள்ளாது இருந்து கொண்டு – சந்திரிகா அரசாங்கத்திற்கு உதவும் உலகநாடுகளின் அறியாமையையும் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், இறந்த வீரர்களின்

தமிழ் மக்கள் பெரும் துன்பத்தை எதிர்கொண்டபோதும், போர் முனையிலும் சரி – அரசியல் அரங்கிலும் சரி சிங்கள அரசிற்கு, பாதகமான வகையிலேயே கடந்த போராண்டு கழிந்துள்ளது. கடந்த போராண்டில் கதாநாயக பாத்திரத்தை வகித்த வன்னிச்சமர், புதிய ஆண்டிலும் முதன்மை இடத்தை வகிக்கப் போகின்றது. ✳

# படையினரின் இழப்புகள் தோல்விகளை இருட்டடிப்புச் செய்வதில் முனைப்புடன் செயலாற்றும் சிறீலங்கா அரசு

வடக்கு – கிழக்கில் சிறிலங்கா ஆயுதபடையினருக்கு ஏற்படும் இழப்புகள், தோல்விகள் என்பவற்றை இருட்டடிப்புச் செய்வதை சிறீலங்கா அரசாங்கம் தற்போது முனைப்புடன் செயலாற்றி வருகின்றது. இதனால் வடக்கு – கிழக்கில் ஏற்படும் பெரும் மோதல்களையே சில சமயம் மூடிமறைத்து விடப்பார்க்கின்றது. அத்தோடு, தமது தரப்பு இழப்புகளை மிகவும் குறைந்ததாகக் கூறி உண்மையினை மறைத்துவிடப் பார்க்கின்றது. இவ்வாறு அரசாங்கம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் முயற்சிக்கு 24ஆம் திகதி ஒலுமடுப் பகுதியில் இடம்பெற்ற கடும்மோதல் நல்ல எடுத்துக்காட்டாகும்.

இம்மோதலில் எதிர்பாராதவிதத்தில் கடும் தோல்வியொன்றைச் சந்தித்த சந்திரிகா அரசாங்கம், மோதல் இடம்பெற்று 24 மணிநேரம் கடந்துவிட்ட நிலையில்கூட இதுகுறித்த தகவல்களை வெளியிடவில்லை. இந்த நிலையானது, செய்திகள் வெளிவருவதைத் தடுப்பது மட்டுமல்ல, செய்தியாளர்களையும் பெரும் குழப்பத்திற்கு உள்ளாக்குவதாகவே உள்ளது.

எடுத்துக்காட்டாகக் கூறுவதானால், அண்மையில் பெரும் தோல்வியில் முடிவுற்றதும் 50க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் பலநூறு

ஒருபுறம், படையினரின் இழப்புகளை மறைக்கமுடியாதவாறு ஆதாரங்கள் புலிகளின் கைகளுக்குக் கிடைத்து விடுகின்றன. மறுபுறம், இன்றைய நவீனரக தொலைத் தொடர்பு வசதிகள் விரைவிலேயே செய்தியை உலகில் பரவச் செய்துவருகின்றன. இந்த நிலையில் அரசு, தகவல்களை மூடிமறைக்கச் செய்யும் முயற்சியானது, தகவல்கள் வெளியாவதை சில மணித்தியாலங்கள் வரையுமே மறைத்து வைக்கமுடியும்.

இராணுவத்தினர் காயப்பட்டதுமான ஒலுமடு நோக்கிய நகர்வு குறித்த தகவலைக்கூட, முற்றாகவே அரசு இருட்டடிப்பு செய்ய முற்பட்டது. இதனால் செய்தியாளர்கள் பெரும் குழப்பத்திற்கும் ஏமாற்றத்திற்கும் உள்ளாகினர். இம்மோதல் பற்றிய சம்பவம் நடைபெற்ற அன்றுமாலை தகவல் வெளியிட்ட சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு, சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான கிபீர் விமானங்களும் எம்.ஐ24 ரக உலங்கு வானூர்திகளும் ஒலுமடுவில் இருந்து மாங்குளம் நோக்கிச் செல்லும் பாதையில் உள்ள புலிகளின் நிலைகளை குறிவைத்துத் தாக்கியதாகவும் இதனால் புலிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டதாகவும் மட்டுமே தெரிவித்தது. அதாவது, ஒரு நேரடி மோதல் ஜெயசிக்குறுய் துருப்புகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டதாக அவர்கள் குறிப்பிடவில்லை. ஆகையினால்

## இன்னும் எவ்வளவு காலத்திற்கு மறைக்க முடியும்?

இதுகுறித்து கொழும்பில் உள்ள எவருமே அறிந்திருக்கவில்லை. அதாவது, பெரும்மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளதை அவர்களால் ஊகிக்க முடியவில்லை.

இதேவேளை, வவுனியாவில் உள்ள செய்தியாளர், இதனை ஊர்ஜிதம் செய்தனர். இம்மோதல் குறித்து பி.பி.சியின் சிங்கள சேவைக்கு பேட்டியளித்த "திவயின"

அண்மையில் பெரும் தோல்வியில் முடிவுற்றதும் 50க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் பலநூறு இராணுவத்தினர் காயப்பட்டதுமான ஒலுமடு நோக்கிய நகர்வு குறித்த தகவலைக்கூட, முற்றாகவே அரசு இருட்டடிப்பு செய்ய முற்பட்டது. இதனால் செய்தியாளர்கள் பெரும் குழப்பத்திற்கும் ஏமாற்றத்திற்கும் உள்ளாகினர்.

செய்தியாள்ரான திரு. ரத்துகமகே, பெரும் மோதல் ஒன்று இடம்பெற்றது என்பதை வன்னிப்பகுதியில் கேட்ட குண்டுச் சத்தங்களில் இருந்தும், காயமடைந்து வந்த பெருமளவு இராணுவத்தினர் எண்ணிக்கை யில் இருந்தும் ஊர்ஜிதம் செய்தாரே ஒழிய, யார் யார்மீது தாக்கினார்கள் என்றோ தாக்குதல் நோக்கம் குறித்து சரியான மதிப்பீடு செய்யவோ முயலவில்லை. அவரின் கருத்துப்படி "புலிகளே இத்தாக்குதலை ஆரம்பித்தனர்" என்பதாகவே உள்ளது. ஜெயசிக்குறுய் துருப்புக்கள் மீது புலிகள் மேற்கொண்ட எட்டாவது பெரிய தாக்குதல் என அவர் இதனை தெரிவித்தார். இது போன்ற ஒரு நிலையிலேயே செய்தியாளர் திரு. மாணிக்கவாசகரும் இருந்தார். வன்னியில் இடம் பெறும் குண்டுச் சத்தங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வன்னியில் மோதல் இடம் பெறுவதாகக் கூறியதுடன், "புலிகளின் எறி கணைத் தாக்குதலினால் கனகராயன்குளம் முனையில் இருந்த சில இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயத்திற்கு உள்ளானதாகவும் தெரிவித்தார்". இந்த வகையில், தமது படையினரின் இழப்புகளை மட்டுமல்ல, சம்பவங்களையும் செய்தியாளர் கண்களில் இருந்தோ காதுகளில் இருந்தோ மறைக்க அரசாங்கம் முயல்கின்றது. ஆனால் இது எத்தனை தூரம் சாத்தியமானது?

ஒருபுறம், படையினரின் இழப்புகளை மறைக்கமுடியாதவாறு ஆதாரங்கள் புலிகளின் ,கைகளுக்குக் கிடைத்து விடுகின்றன. மறுபுறம், இன்றைய நவீனரக தொலைத் தொடர்பு வசதிகள் விரைவிலேயே செய்தியை உலகில் பரவச் செய்து வருகின்றன. இந்த நிலையில் அரசு, தகவல்களை மூடிமறைக்கச் செய்யும் முயற்சியானது, தகவல்கள் வெளியாவதை சில மணித்தியாலங்கள் வரையுமே மறைத்து வைக்கமுடியும். ஆனால், அதன் பின்னர் அவமானத்துடன் உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றது. இது தவிர்க்க முடியாததொன்றாகவே மாறியுள்ளது. ✳

# சொல்ல மறந்ததும்! சொல்லியதில் மறைந்ததும்!

உலகில் போராடும் இயக்கங்கள் வலுப்பெற எத்தனையோ வழிகள் இருக்கலாம். ஆனால், மூன்று வழிகளே இருப்பதாக சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா அண்மையில் கண்டுபிடித்துள்ளார். அந்த மூன்று வழிகளும் யாதெனில், ஒன்று மக்களின் ஆதரவு – இரண்டாவது வெளிநாடுகளின் ஆதரவு – மூன்றாவது ஒரு நாட்டரசு ஆயுதங்களும் நிதியுதவியும் வழங்குவது. இவ்வாறு அந்த மூன்று வழிகளையும் அவர் வகைப்படுத்தியுள்ளார். இந்த மூன்று வழிகளுமே விடுதலைப் புலிகளுக்கு சார்பாக அமைந்துவிட்டதாகவும் அவர் கூறிக் கவலைப்பட்டுள்ளார்.

சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா இவ்விதம் கூறிக் கவலை கொண்டது, கண்ணொறுவ நகரில் நடந்த மாநாடொன்றில்.

"...... ஒரு போராளி இயக்கத்திற்கு ஆதரவு வழங்கிய நாடாக இலங்கை மட்டுமே இருக்கமுடியும்" என்று கூறித் தனது வயிற்றெரிச்சலையும் அங்கு கொட்டித் தீர்த்தார்.

இதில் அவர் கூறிய முதலாவது கருத்தின்படி...... விடுதலைப் புலிகளிற்கு ம்க்களின் ஆதரவு உண்டு என்பதை அவரே பகிரங்கமாக ஒத்துக்கொண்டுள்ளார். அதாவது, தனது சமாதானத்துக்கான போர் என்ற நவீனமான நூதனமான பெயர் சூட்டலுடன் மேற்கொள்ளப்படும் இனஅழிப்புப் போரிற்கு அவர் அடிக்கடி கொடுக்கும் விளக்கம் அவரது இந்த வாக்குமூலத்தால் அடிபட்டுப்போகின்றது.

விடுதலைப் புலிகள் வேறு, மக்கள் வேறு என்றும், விடுதலைப் புலிகளிடம் இருந்து மக்களைக் காக்க மேற்கொள்ளப்பட்டதே சூரியக்கதிர்கள் என்றும் தொடரும் தாக்குதல்கள் என்றும் தம்மால் கூறப்படுபவை அப்பட்டமான பொய் என அவரே ஒத்துக்கொண்டுள்ளார்.

தமிழ் மக்களையும் புலிகளையும் பிரித்து— இனவிடுதலைப் போரை அழித்து..... இனத்தையே அடக்கி ஒடுக்கி முடிவில் அழிப்பதே நோக்கம் என்பதைத் தன்வாயால் சொல்லாமலேயே சொல்லியுள்ளார். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் புலிகளே என்பதும், போலி சனநாயகத் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், தமது தேவை கருதி குறுக்குவழிகளில் தெரிவு செய்யப்படும் பேர்வழிகள் என்பதும் சந்திரிகா அம்மையாரின் கருத்தாய் வெளிப்பட்டுள்ளது.

இரண்டாவது கருத்து, அவர்களது வெளிநாட்டுக் கொள்கை அல்லது வெளிநாடுகளில் பெருந்தொகைப் பணத்தைக் கொட்டி மேற்கொள்ளப்பட்ட அவர்களது பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் விடுதலைப் புலிகள் மீது அழுத்தங்களை மேற்கொள்ள, தடைகளை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் படுதோல்வியில் முடிவடைந்துள்ளதை வெளிப்படுத்துகின்றது. லக்ஸ்மன் கதிர்காமர் போன்ற இனத்துரோகிகளின் துணையுடன் மேற்கொள்ளப்பட்ட பகீரதப் பிரயத்தனங்கள் தோல்வியில் முடிவடைந்துள்ளன என்பதே அம்மையாரின் ஆதங்கத்தில் வெளிப் பட்டுள்ளது.

இதில் வெளிநாடுகளின் ஆதரவு நிலையை தமிழீழ விடுதலைப் போராட்டம் பெற்றுவிட்டதாகச் சொல்ல முடியா விட்டாலும், வெளிநாடுகள் சிலவற்றின் அனுதாபத்தை தமிழினம் பெற்றிருப் பதையும், தமிழீழப் போராட்டத்தின்பால் உள்ள நியாயத் தன்மையை உலகம் ஓரளவேனும் ஒத்துக்கொண்டிருப்பதாகவும் சொல்லமுடியும்.

வெளிநாடுகளின் ஆதரவு நிலை விடுதலைப் புலிகளிற்கு இருக்குமாக இருப்பின், போராட்டம் புதிய வளர்ச்சிப்படி நிலையில் முன்தள்ளப்பட்டு, தமிழீழம் தன்சுதந்திரத்தை எப்பொழுதோ பிரகடனப்படுத்தியிருக்கக் கூடும்.

ஆனால், தமிழீழம் தன்சொந்தக் காலால், அளப்பரிய சுமையைச் சுமந்தபடி 'தன்மக்கள்' என்ற அசைக்கமுடியாத சக்தியை நம்பியே தன்விடுதலைப் பாதையில் நடந்து செல்லுகின்றது.

சந்திரிகா அம்மையார் அச்சப்படும் வெளிநாட்டு நிலைப்பாடானது, இன அழிப்பை மேற்கொள்ளும் தமது நிலைப்பாட்டிற்கு சாதகமான சூழ்நிலையை வெளிநாடுகளில் தம் மனம் போலத் தோற்றுவிக்க முடியவில்லை என்பதே.

இங்கு உலகம் பூராவும் பரந்துவாழும் தமிழ் மக்களின் பங்களிப்பு, சிறீலங்கா அரசாங்கத்தின் போலித்திரையைக் கிழித்து உண்மையை உலகிற்குக் காட்ட ஓரளவேனும் பயன்படுகின்றது. இராஜ தந்திரிகள் மட்டத்தில் அது மேற்கொள்ளும் நகர்வுகளும், அரசு என்ற ரீதியில் தகவல் தொடர்பு ஊடகங்களிற்கூடாக அதனால் சாதிக்கமுடியும் விசயங்களையும் 'தாய்நாட்டைப் பிரிந்து வாழும் மக்கள்' என்ற நிலையில் இருந்து தமிழ் மக்கள் முறியடித்து வருகின்றனர். உலகம் பூராவும் எழுச்சி கொள்ளும் தமிழ் மக்களின் பெருங்கூட்டங்களே, சிங்கள இனவெறி அரசுகளின் கொடுங்கோன்மையை வெளிப் படுத்துகின்றது. மூடிய திரைக்குள் நடக்கும் கொடுமைகளை இந்த மக்கள் காவி வருகின்றனர். இந்த மக்களின் உணர்வுக்கு மத்தியில் சிங்கள அரசின் போலிப்பிரச்சாரம் தோற்றுப்போவது தவிர்க்கமுடியாதது.

மூன்றாவதாக சந்திரிகா அம்மையார் குறிப்பிட்டது, நிதியுதவி மற்றும் ஆயுத உதவி பற்றியது. அதாவது, சிறீலங்கா அரசால் செய்யப்பட்ட செய்யப்படுகின்ற உதவி பற்றியது. அவர் இதில் கூற வந்ததும், அதற்கூடாக சாதிக்க நினைத்ததும் வெறுமனே ஐக்கிய தேசியக் கட்சிக்கெதிரான ஒரு அரசியல்ப் பிரச்சாரத்திற்காகவே. ஆனால் அவர் உண்மையை மறந்துவிட்டார் அல்லது மறைத்துவிட்டார்!

விடுதலைப் புலிகளிற்கு பிரேமதாசா ஆயுதங்கள் கொடுத்தார் என்பதும், பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்தார் என்பதும் சந்திரிகா அரசின் அசைக்க முடியாத குற்றச்சாட்டு. அதனை மீண்டும் கிளறி எதிர்க் கட்சியை நாறடித்து, தனது அரசின் நாற்றத்தை மூடிமறைக்க முனைந்துள்ளார் என்பதே இதனூடு வெளிப்படுகின்றது.

பிரேமதாசா ஆயுதங்கள் கொடுத்தாரா இல்லையா? விடுதலைப் புலிகள் அதனைப் பெற்றுக் கொண்டார்களா இல்லையா? என்பதல்ல இப்பொழுதுள்ள பிரச்சினை. விடுதலைப் போராளிகள் வலுப்பெற முக்கிய தேவையான ஆயுதங்களைப் பெறும் வழி இந்த அரசாங்கத்திலேயே விடுதலைப் புலிகளிற்கு சாதகமாய் அமைந்திருக்கின்றது என்பதே உண்மை. எதிரிகளிடம் இருந்தே ஆயுதங்களைப் பறித்தெடுத்துப் போரிடுதல் என்ற போராளிகளின் தேவைக்கு இந்த அரசாங்கமே களம் அமைத்துக் கொடுத்தது. விடுதலைப் புலிகளை ஆயுத ரீதியாக நவீனமயப்படுத்திய நன்றிக்குரியவர்கள் சந்திரிகா ஆட்சியாளர்களே. ஆட்டிலறிகள், டாங்கிகள், கவசவாகனங்கள், டோறா பீரங்கிப் படகுகள், மோட்டார்கள், பெருந்தொகை ஆயுதங்கள் என இந்த அரசாங்கத்தின் காலத்திலேயே சாத்தியமாகியிருக்கிறது. ஒரு மரபுவழிப் போரை நடத்தும் படை வலுவை இந்த அரசாங்கமே வழங்கியிருக்கின்றது என்றால் மிகையாகாது.

இதையெல்லாவற்றையும் விட சந்திரிகா அம்மையார் சொல்ல மறந்த ஒரு முக்கியமான சாதக அம்சத்தை விடுதலைப் புலிகள் கொண்டிருக்கின்றார்கள். அதாவது உண்மை – சத்தியம். ஒரு இனத்தின் ஆன்மாவாய் நின்று, அதன் விடுதலைக்கு தம்மையே கொடுத்துப் போரிடும் பரிசுத்தமான உண்மையும் நேர்மையும் விடுதலைப் புலிகளிடத்தே நிறைந்து கிடக்கிறது. சத்தியப் போரின் அசைக்க முடியாத வலு அவர்கள் வசம் இருக்கிறது. அவர்களிடத்தே பொய்மை படுமோசமாகத் தோற்றுப் போகும். வரலாறு அதனைப் பதியக் காத்திருக்கிறது.

-சுப்பு-

**விடுதலைப் போராளிகள் வலுப்பெற முக்கிய தேவையான ஆயுதங்களைப் பெறும் வழி இந்த அரசாங்கத்திலேயே விடுதலைப் புலிகளிற்கு சாதகமாய் அமைந்திருக்கின்றது என்பதே உண்மை. எதிரிகளிடம் இருந்தே ஆயுதங்களைப் பறித்தெடுத்துப் போரிடுதல் என்ற போராளிகளின் தேவைக்கு இந்த அரசாங்கமே களம் அமைத்துக் கொடுத்தது.**

## லண்டன் மரதன் ஓட்டப் போட்டியில் தமிழீழ மெய்வல்லுநர்கள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரித்தானியக் கிளையினர் 1997ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் பல. அவற்றுள் லண்டன் மரதன் ஓட்டப் போட்டியில் தமிழீழ மெய்வல்லுநர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆம். லண்டனில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகின்ற பிரமாண்டமான நிகழ்ச்சிகளில் ஒன்றாகிய லண்டன் மரதன் ஓட்டப் போட்டியில் முதல் முறையாக 1997இல் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரித்தானியக் கிளையின் ஏற்பாட்டில் பத்து தமிழீழ மெய்வல்லுநர்கள் பங்குபற்றினர். இதன்மூலம் இவர்களது திறமை வெளிக்கொணரப்பட்டது. குறிப்பிட்ட 26 மைல்களையும் குறித்த கால எல்லைக்குள் ஓடி முடித்ததற்கான பதக்கங்கள் லண்டன் மரதன் அமைப்பாளர்களால் வழங்கப்பட்டது. அத்துடன், தமிழீழ மக்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களுக்காக ஆறாயிரத்து எண்ணூற்றி இருபது பவுண்ஸ் நிதி திரட்டிய சாதனையாளர்களாகவும் திகழ்ந்தனர்.

இவ் மரதன் ஓட்டத்துக்கு தமிழீழ மெய்வல்லுநர்களை ஈடுபடுத்தியதன் மூலம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மனநிறைவு பெற்றது.

ஏனெனில் இதன் மூலம்,

1–ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய மெய்வல்லுநர்களின் ஆரோக்கியம் பேணப்படுதல் முக்கிய விடயமாக அமைந்தது.

2–லண்டன் மாநகர மக்களுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒன்றுகூடல் நிகழ்த்துகின்ற ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.

3–தமிழீழம் தொடர்பான நினைவுகளைத் தமிழரல்லாத லண்டன் வாசிகளுக்கும் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

4–அத்துடன், தாயக மக்களுக்கு நிதி சேகரிக்கும் புதியதோர் சந்தர்ப்பமாகவும் அமைந்தது.

மேற்படி பயன்களை உணர்ந்து கொண்ட நிலையில் இந்த ஆண்டிற்கான மரதன் ஓட்டப் போட்டிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் ஆர்வம் வளர்ந்திருப்பதில் வியப்பில்லை. சென்ற ஆண்டு 10 ஆக இருந்த மெய்வல்லுநர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு 41ஆக அதிகரித்துள்ளமை இங்கு குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

மேலும் இவ்வாண்டு பங்குபற்றும் மெய்வல்லுநர்களின் ஆரோக்கியத்தை விசேடமாகக் கவனிக்கும் முகமாக, இரு வைத்தியர்கள் மருத்துவப் பரிசோதனை செய்ய முன்வந்துள்ளமை மிகவும் பாராட்டுக்குரியது.

இம்மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கேஸ்ரிங்ஸ் (Hastings) என்னுமிடத்தில் நடைபெறவுள்ள அரை மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ள மெய்வல்லுநர்களை அவர்களது உறவினர்கள், நண்பர்கள் மட்டுமல்லாது இன உணர்வுள்ள அனைத்துத் தமிழர்களும் பாராட்டுகின்றனர்.

இவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிப்பதுடன் நின்றுவிடாது, இந்த மரதன் ஓட்டப் போட்டி மூலம் தமிழீழத்தில் போரின் அனர்த்தங்களால் அங்கவீனர்களாகியுள்ள தமிழீழக் குழந்தைகளுக்கு நிதி சேகரிக்கும் அவர்களது உயர் நோக்கத்திற்கும் உதவுமாறு அனைத்துத் தமிழர்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரித்தானியக் கிளையினர் அன்புடன் கேட்டுக் கொள்கின்றனர். *

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியொன்று

(தொடர்ச்சி)

யூதர்களைப் பலஸ்தீனத்துக்குள் கடத்திச் செல்ல ஏன் தலைகீழாக நிற்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா? எங்களில் உள்ள அன்பில்தான் அப்படிச் செய்கிறார்கள் என்று நீ உண்மையாகவே நினைக்கிறாயா? அரபுக்களுடன் சண்டையிட ஆட்கள் தேவையென்பதால்தான் அதைச் செய்கிறார்கள்."

"அப்படியானால் அரபுக்களோடு சண்டை யிடாத அமெரிக்கர்களும், மற்றவர்களும் ஏன் எங்களுக்கு உதவுகிறார்கள்?"

"ஏன் என்று நான் சொல்கிறேன். அவர்கள் தங்கள் மனச்சாட்சிக்குப் பதில் சொல்ல அப்படிச் செய்கிறார்கள். தாங்கள் விசவாயுக் கூடங்களில் அடைக்கப் படாதது பற்றி, அவர்கள் குற்ற மனப்பான்மையோடு இருக்கிறார்கள்."

பொறுமையை இழக்காமல் இருப் பதற்காக, கரேன் கைகளையும் பற்களையும் இறுகப் பிடித்தபடி வந்தது. டேவிற் பென் அமியும், கிற்றி பிறமென்றும் அவனைத் தொடர்ந்து உள்ளே வந்தனர். டேவிற் கதவைப் பூட்டித் தாளிட்டான்.

டொவ்வின் கண்கள் சந்தேகத்தால் குறுகின. "அவள் இங்கே இருப்பது எனக்கு அவசியமில்லை" என்றான்.

"எனக்குத் தேவை." அரி பதிலிறுத்தான். பின், "நீ கதைக்கலாம்" என்றான். டொவ் தன் கண்களைச் சிமிட்டிக் கொண்டே தயங்கினான். பென் கானானை அசைக்க முடியாதென்று அவனுக்குத் தெரியும்.

அவன் மாடத்துக்குச் சென்று பிரதிபண்ணப்பட்ட மாற்றுதலுக்குரிய ஆவணங்களை வெடுக்கென இழுத்து வந்தான். "ஒரு அலியா பெற் கப்பல் சைப்பிரசுக்கு வரப் போகிறது. அதில் இந்த முந்நூறு பிள்ளைகளும் போகப் போகிறார்கள் என்று நான் நினைக் கிறேன்," என்றான்.

"அது ஒரு நல்ல அனுமானம். தொடர்ந்து சொல்."

"நாங்கள் ஒரு ஒப்பந்தம் செய்தோம் பென் கானான். என்னுடைய பெயரையும், கரேன் கிளமென்றுடைய பெயரையும் இந்தப் பட்டியலில் சேர்க்க விடாவிட்டால் உங்களுக்காக இந்த ஆவணங்களில் வேலை செய்ய மாட்டேன். ஏதாவது போதிக்காதே. நீ உன்னுடைய கூடாரத்துக்குப் போய்க் காத்திரு. பத்து நிமிடங்களில் உனக்குப் பதில் தருகிறோம்" என்றான் அரி.

டொவ் கதவுப் பூட்டைத் திறந்து வெளியே ஓடிப் போனான். "பொடியன் சரியான ஆள்தான்" என்றான் டேவிற்.

டேவிட்டை வெளியே போகும்படி தலையால் சைகை செய்தான் அரி. அவன் வெளியேறிக் கதவு பூட்டப்பட்ட அந்தக் கணத்தில் அரியின் மேல் சட்டையைப் பற்றிப் பிடித்தாள் கிற்றி. "அவள் அந்தக் கப்பலில் போகக்கூடாது அவள் எக்ஸோடஸில் போகக் கூடாது."

அரி அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டான். "நீ உன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாவிட்டால் உன்னோடு பேசக்கூடப் போவதில்லை. ஒரு நரம்புத் தளர்ச்சிப் பெண்ணைச் சமாளிப்பதை விட, வேறு அதிக வேலைகள் இருக்கின்றன.

கிற்றி தன் கையை ஒரு உதறலுடன் எடுத்துக் கொண்டாள்.

"நான் சொல்வதைக் கவனி. இப்படியான ஒரு விசயம் கிளம்பும் எனக் கனவில்




லியோன் யூரிஸ்

முடியாது."

"அவனோடு பேசுங்கள். எதையாவது பேசுங்கள். எதையாவது வாக்குப் பண்ணுங்கள். கரேனை இங்கேயே வைத்திருங்கள்."

"பலனிருக்குமென்றால் நான் விரைத்துப் போகும்வரை கதைக்கத் தயார்."

"பென் கானான் தயவுசெய்து... அவன் வேறொன்றை ஏற்றுக்கொள்வான்.... கரேன் போகவேண்டுமெனப் பிடிவாதம் பிடிக்க மாட்டான்."

அரி இல்லையெனத் தலையாட்டி விட்டு, "அவனைப்போல் நூற்றுக்கணக்கான பிள்ளைகளைக் கண்டிருக்கிறேன். அவர்களில் மனிதத்தன்மை அதிகம் மீதியாயிருக்காது. கௌரவத்துடனான அவனது தொடர்பு கரேன் மட்டுந்தான். நீயும் நானும் அறிந்தபடி, அவன் அந்தப் பெண்பிள்ளைக்கு விசுவாசமாக இருக்கப் போகிறான்.

கண்களை மூடிக் கொண்டாள். "டொவ்... டொவ் டொவ்... உனக்கு வெறுப்பைத் தர வேறு ஒன்றும் தெரியாதா?" சொல்லிவிட்டுக் கரேன் திரும்பி கதவை நோக்கி நடந்தாள்.

அவன் ஓடிவந்து அவள் பாதையை மறித்துக் கொண்டே, "இதோ திரும்பவும் என்னில் கோபமாகி விட்டாய்" என்றான்.

"ஆமாம், நான் கோபம்தான்."

"எனக்கிருக்கும் ஒரே சிநேகிதி நீதான் கரேன்."

"உனக்குத் தேவையானதெல்லாம், பயங்கரவாதிகளோடு சேர்ந்து கொலை செய்வதற்காக பலஸ்தீனம் போக வேண்டும் என்பதுதான்." அவள் திரும்பவும் அறைக்குள் வந்து, ஒரு வாங்கின் மேல் அமர்ந்து கொண்டாள். பெருமூச்சொன்றை வெளியிட்டாள். அவளுக்கு முன்னால் கரும்பலகையில் பெரிய எழுத்துக்களில் "1917 இன் பல்போர் பிரகடனம்தான் பலஸ்தீனத்தின் யூத தாயகத்துக்கான பிரிட்டிசாரின் உறுதிமொழி" என்று எழுதிமிருந்தது.

"நானும் பலஸ்தீனம் போக விரும்புகிறேன்." அவள் மெதுவாக முணுமுணுத்தாள். போகாவிட்டால் இறந்து போய்விடுவேன் என்பதுபோல் விரும்புகிறேன். என் தந்தை அங்கே எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். அது எனக்கு நன்றாகத் தெரியும்."

"நீ உன்னுடைய கூடாரத்துக்குப் போய் எனக்காகக் காத்துக் கொண்டிரு. பென் கானான் விரைவில் இங்கே வருவார்."

கரேன் போய் பத்து நிமிடங்கள் வரை டொவ் அதிகரித்துக்கொண்டிருக்கும் கோபத்தோடு அறைக்குள் நடை பயின்று கொண்டிருந்தான்.

கதவு திறந்தது. அரி பென் கானானின் விசாலமான உருவம் கதவைக் கடந்து கேள்விகள் இருக்கிறதா?"

அரி கடைக்கண்ணால் கிற்றியை நோக்கினான்.

"டொவ் நீ செய்யும் வேலையை இங்கு வேறு ஒருவரும் செய்ய முடியாது என்பது உனக்குப் புரியவில்லையா? உன்னுடையதும், கரேனுடையதும் சேவையின் மதிப்பு பலஸ்தீனத்தை விட, இங்கு அதிகம் என்பது உனக்குப் புரியவில்லையா?"

என டேவிற் அமி கேட்டான்.

"நான் அதைப் பற்றிக் கவலைப் படவில்லை என்பது உனக்குப் புரியவில்லையா" எனப் பதிலிறுத்தான் டொவ்.

அரி புன்முறுவல் பூப்பதை மறைக்கப் பார்வையைக் கீழே செலுத்தினான். டொவ் முரட்டுத்தனமானவன், கெட்டித் தனமானவன். தன் விளையாட்டையும் முரட்டுத்தனமாகவே ஆடினான். தடை முகாம்களில் இருந்தவர்கள் குறுகிய நோக்கம் கொண்டவர்களாக இருந் தார்கள்.

"சரி, துரும்பு உன் கையில்தான். உன்னுடைய பெயரைப் பட்டியலில் சேர்த்துவிடு" என்றான் அரி.

"அது எங்களுடைய ஒப்பந்தத்தின் பகுதியல்ல."

"நான் புது ஒப்பந்தம் பற்றிப் பேசுகிறேன்."

அரி அந்தப் பையனுக்குக் கிட்டப்போய் அச்சமூட்டுவதுபோல் நின்று கொண்டு, "நான் அதை விரும்பவில்லை டொவ்" என்றான். டொவ் பின்னால் அசைந்தான்.

"நீ என்னை அடிக்கலாம். நான் நிபுணர்களால் அடிக்கப்பட்டிருக்கிறேன். நீ என்னைக் கொல்லலாம். அதற்கும் நான் பயப்படவில்லை. யேர்மனியர்களுக்குப் பிறகு நீ செய்வது எதுவும் என்னைப் பயமுறுத்தாது.

"யூதரின் பிரசாரத்தை எனக்கே கூட நினைக்கவில்லை. எங்கள் விசயம் முடிய இன்னும் நாலு நாட்களே இருக்கின்றன. அவன் எங்களைக் கழுத்தில் பிடித்திருப்பது அவனுக்கே தெரிந்திருக்கிறது. அவன் இவைகளை முடித்துத் தராவிட்டால் நாங்கள் அசைய

தொடரும்...

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை **10- 04 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**
**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**

www.tamilarangam.net



## சிறுகதை




மதியம் தொடங்கி கொட்டோ கொட்டென்று கொட்டிக்கொண்டிருந்த மழை, வெறி அடங்கி ஓய்ந்திருந்தது. கிளிநொச்சி ஆமி விட்டுவிட்டுச் ஷெல் அடித்துக்கொண்டிருந்தான். ஒவ்வொரு ஷெல்லும் இரைந்தபடி வந்து பெரும் சத்தத்தோடு வெடிக்கையில் நெஞ்சம் பதறிற்று.

"இந்த மழையுக்கை கூட ஈன இரக்கமில்லாமல் செல்லடிக்கிறியே பாவி..." சிங்கள ஆமியைச் சபித்தபடியே மறுபக்கம் புரண்டு படுத்தாள் கமலம்.

தலைக்குள் நரம்புகள் எல்லாம் சுண்டி இழுத்தன. தொண்டைக்குள் அரித்தது. "கோதாரி பிடிச்ச இந்த மலேரியாதான் என்னைக் கொல்லப்போகுதுபோல" சொல்லிக்கொண்டு மூத்தவன் சேகரைத் தொட்டுப்பார்த்தாள். பாயை விட்டுவிலகி முகக்குப்புற நித்திரையாகிக் கிடந்தான் அவன்.

"என்ர குஞ்சு பிறக்கேக்க எவ்வளவு கனவு கண்டன்... படிப்பிக்க வேணும்... உத்தியோகமாக்க வேணும். . . . என்னை ஒதுக்கி வைச்சவைக்கு முன்னால் என்ர பிள்ளையை தலை நிமிர்த்தி நடக்க வைக்கவேணுமெண்டு...." இருகைகளாலும் முகத்தைப் பொத்திக்கொண்டு கமலம் அழுதாள். அழுவதற்கு இருள் வசதியாக இருந்தது.

"கமலம் அழாதை. நானிருக்கிறன்.... ஏனிப்ப அழுகிறாய்?" முகத்தைப் பொத்திய அவள் கைகளைப் பிடித்து கந்தசாமி இழுப்பது போலிருந்தது.

"அ.....அ...என்ன....இ....இருக்கிறியளோ? – விருட்டென்று எழுந்து அரிக்கன் லாம்பைத் தூண்டிவிட்டுப் பார்த்தாள்.

பிள்ளைகள் சேகரும், கவிதாவும்தான் அருகருகே தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

காணாமற் போய்விட்ட கணவன் கந்தசாமியின் நினைப்பு அவளை அழுத்தி வருத்தியது.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் பாடசாலைக்கு அருகே உறவினர் வீட்டில் காலத்தை நகர்த்திக்கொண்டிருந்தார்கள்.

உறவினர்களின் சீறல் சினப்புகள் ஒருபுறம்... இராணுவத்தின் கொடூரங்கள் மறுபுறம் என்று வாழ்வின் மீதான பிடிப்பு வற்றிக்கொண்டிருந்தது.

திடீரென்று இராணுவம், 'சத்ஜெய'வை ஆரம்பித்தது.

அகோரச் ஷெல்லடி, விமானங்களின் மூர்க்கம் கொண்ட குண்டுவீச்சு, கையில் அகப்பட்ட தட்டுமுட்டுச் சாமான்களோடு மீண்டும் இடம் பெயர்ந்தார்கள்.

விட்டுவிட்டு ஓடிவந்த பொருட்களில் கந்தசாமியின் சயிக்கிளும் ஒன்று. சயிக்கிளை விட்டு வந்ததில் கந்தசாமி உடைந்து போனான். பதினாறு வருசமாய் அவன் பிள்ளைபோல் பாதுகாத்த சயிக்கிள் அது.

"இனி எந்த உறவினர்களோடோ அல்லது நண்பர்களோடோ சேர்ந்து இருப்பதில்லை" என்று கமலம்தான் அடம் பிடித்தாள். அனுபவங்கள் கமலத்தை இப்படி ஆக்கிவிட்டிருந்தன.

தெருவோரமாக – காட்டுச் செடிகளைக் குடைந்து தற்காலிகமாக ஓர் இருப்பிடம் அமைத்திருந்தார்கள்.

வந்த நாள் முதல் மரத்தடியில் வானத்தை வெறித்தபடியே நாட்களை உருட்டிக் கொண்டிருந்த கந்தசாமி, ஒருநாள் குலத்தைச் சந்திக்கவென்று போய்வந்தான்.

"இஞ்ச கமலம்.... மெல்லமெல்லப் போய்.... சயிக்கிள ஒருக்கால் பாத்து வரட்டே...."

"எங்கபோய்....?"

"அங்க... நாங்கள் இருந்த வீட்டதான்...."

"ஏன் அவங்கட கையாலை சூடு வாங்கிச் சாகவோ? ..."

கந்தசாமி சிரித்தான். பிறகு சொன்னான்:

"அவனவன் போய்... தேங்காய், மாங்காய் எண்டு பிடுங்கிவந்து விக்கிறான் நீ, சயிக்கிள் எடுத்துவர விடுறாயில்லை...."

"சயிக்கிள் எடுக்கவெண்டுபோய்... உங்களுக் கொண்டு நடந்தால்.... நானும் பிள்ளையளும் என்ன செய்யிறது?"

கமலம் விம்மலோடு கேட்டாள்.



"விசரி உனக்கு நெடுகப் பயம்தான்.... குலம், ஞானம், குமார் எல்லாரும் சாமான் எடுக்கப் போறாங்கள்... அவங்களோடதான் போறன்.... தனியவே போகப் போறன்?"

"போற அண்டே வருவியளோ?"

"உடனை வருவம்... போறது.... சயிக்கிள் எடுக்கிறது.... திரும்பி வாறது.... அவ்வளவுதான்...."

'சரி' நெஞ்சுமுட்டின நேர்த்திக் கடன்களோடு கந்தசாமிக்கு விடை கொடுத்தாள்.

அன்று போனவன் போனவன்தான். குலம், ஞானம், குமார் எல்லோரும் வந்துவிட்டார்கள். கந்தசாமி மட்டும்...?

அவனைத்தேட எடுத்த முயற்சிகள் எல்லாமே தோல்வி கண்டன.

கமலம் மெல்ல, மெல்ல இறுகிப் போனாள்.

முருகன் கோயில் மணி குளிரைக் கிழித்துச் செவிகளை அதிர்வித்தது.

'அம்மா....'

'ம்....'

"கச்சான் வறுக்கவேணுமல்லே... எழும்புங்கோவன்...? சேகரின் குரல் நெஞ்சைத் துளைத்து வலித்தது.

"படிக்கிற வயதில... என்ரபிள்ளை...?"

கண்களின் ஓரம் நீர் துளிர்த்தது. எவ்வளவுதான் ஆழ்ந்த நித்திரை என்றாலும் கோயில் மணிச் சத்தத்துக்கு சேகர் எழுந்து விடுவான்.

'சேகர்..'

'என்னம்மா? ...'

"எனக்கு ஏலாமக்கிடக்கு.... மருந்தெடுக்கப் போகவேணும்... இண்டைக்கு வீட்டில நில்.... கச்சான் விக்கப் போகவேண்டாம்...."

பள்ளிக்கூடம் விட்டு வரேக்கை சின்னப்பெடியள் எல்லாம் கச்சான் வாங்கிற ஆசையில வருவாங்கள்... பாவமம்மா..."

கமலம் மெல்லக் கையூன்றி எழுந்தாள். சுள்ளென்று கன்னங்கள் வலித்தன.

ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் பிரிவில் நீண்டு வளைந்த வரிசையில் கமலம் நின்றுகொண்டிருந்தாள்.

இரண்டு தடவைகள் வாந்தி எடுத்து விட்டதால் களைப்பாக இருந்தது. நண்பகல் ஆகிவிட்டிருந்தது.

நகர்ந்து... நகர்ந்து... மருத்துவரை அண்மித்தபோது அவளுக்கு அச்சரியமாக இருந்தது. "அம்மா இருங்கோ"

எதிர்பார்த்திருக்காத இங்கிதமான குரல் இன்றும் அதிசயமூட்டியது.

> "அம்மா....."
> "ம்....."
> "கச்சான் வறுக்கவேணுமல்லே... எழும்புங்கோவன்...?
> சேகரின் குரல் நெஞ்சைத் துளைத்து வலித்தது.
> "படிக்கிற வயதில... என்ரபிள்ளை....?"
> கண்களின் ஓரம் நீர் துளிர்த்தது.

"என்ன செய்யுது... சொல்லுங்கோ..."

"கை கால் உளைவு.... குளிர்நடுக்கம்... வாந்தி காய்ச்சல்" என்று சொன்னாள்.

இரத்தம் சோதிக்கப்பட்ட துண்டை மருத்துவர் பார்த்தார். தலையை ஆட்டிவிட்டு இன்னொரு துண்டில் எழுதினார். கமலம் அந்த மருத்துவரைப் பார்த்தாள். அதிக உயரமில்லாத மெல்லிய உருவம். இருபத்தைந்துக்கும் முப்பதுக்கும் இடையிலான வயது இருக்கும். கனிவான பேச்சு. கருணையுள்ள பார்வை.

"பெயரென்னம்மா? ..."

"க. கமலாம்பிகை...."

"வயது? ..."

"முப்பத்தெட்டு...."

அந்த மருத்துவர் அவளை நிமிர்ந்து பார்த்தார். பிறகு எழுதினார்.

"ஆரோடை வந்தனீங்களம்மா? ....

"தனிய..."

"ம் அப்படியெண்டா குளிசைகளை எடுத்துக்கொண்டு போய் வீட்டில போடுங்கோ... முழுதும் போடவேணும்... காய்ச்சல் விட்டுட்டுது எண்டு மிச்சக்குளிசைகளை பாவிக்காம விட்டா – திருப்பியும் காய்ச்சல் வரும்... சரியோ...?"

எழுதிய சிட்டையை கமலத்திடம் நீட்டினார் மருத்துவர். இரண்டு கைகளாலும் கமலம் அத்துண்டைப் பெற்றுக்கொண்டு, மருந்து வாங்கும் இடத்துக்கு வந்தாள்.

"மருந்துகளைக் கொடுத்தார்கள்."

வெளியே வந்தாள்.

அந்த மருத்துவரின் தோற்றம், வயது, கனிவு, கருணை எல்லாமே நினைவில நெருடிக்கொண்டிருந்தன.

"என்ர பிள்ள சேகரும் படிச்சா, இப்பிடி ஒரு மருத்துவராய் வந்து, சனங்களுக்கு உதவி செய்யமாட்டானா? ...."

மனதுக்குள் ஆயிரமாய் கேள்விகள்...

"இண்டைக்கு என்ர கஷ்டத்தை தீர்க்கிறதுக்காக பிள்ளையின்ர படிப்பை நிறுத்திட்டன். நாளைக்கு அவனின்ர எதிர்காலம்...?"

சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது நடையின் வேகத்தைக் கூட்டினாள்.

கையிலிருந்த சில்லறைகளை எண்ணிப் பார்த்தாள். இருபத்து மூன்று ரூபா ஐம்பது சதமிருந்தது.

சந்திக்கடையில் இரண்டு கொப்பிகளும் ஒரு பேனையும் வாங்கிக்கொண்டு நடந்தாள்.

தூரத்தில் வரும்பொழுதே சேகரும் கவிதாவும் வீதியைப் பார்த்தபடி வாசலில் குந்தியிருப்பது தெரிந்தது. அவர்களைக் கண்டதும் அடிவயிற்றில் இருந்து பாசம் சுரந்தது.

'அம்மா....'என்று ஓடிவந்து கட்டிப்பிடித்த சேகரையும் கவிதாவையும் பிடித்து – அவர்கள் கையில் கொப்பிகளையும் பேனையையும் கொடுத்தாள்.

ஆச்சரியத்தோடு தன்னை அண்ணாந்து பார்த்தவர்களை அள்ளி அணைத்தாள்.

"குஞ்சுகள்... நாளைக்கு ரண்டுபேரும் பள்ளிக்குடத்துக்குப் போங்கோ.

அம்மா இந்தக் கையும் காலும் இருக்கிறவரை உங்களைப் படிப்பிக்கிறதுக்கு உழைப்பாள்...."

என்றபடி உள்ளே போனாள். கையில் மருத்துவர் தந்த மருந்துச்சரை பவுத்திரமாகக் கிடந்தது. ✳




காதிருந்தும் செவிடானோம் கண்ணிருந்தும் குருடானோம்
மரத்தடியில் வாழுகின்ற மக்களை மறந்துவிட்டோம்
உடன்பிறந்தோர் உற்றாரை உளமிருந்து உதறிவிட்டோம்
பதினோராயிரம் பாலகர்கள் பார்த்திருக்க பறந்துவிட்டார்
பாவிகள் நாமென்ன புல்லுண்ணும் மாக்கள்தானா?
அன்னை தமிழ்த்தாயே ஆணையிடு இவர்களுக்கு
தோற்காத தோழர்க்கு தோள்கொடுக்கச் சொல்லிவிடு
மறுத்தவரை மறுத்துவிடு உன்மக்கள் அல்லவென்று.

**–இர. நடா, யேர்மனி.**

# தோள் கொடுப்போம்..

ஆளணி அதியுயர்
படைக்கலங்களோடு–எம்மை
அடிமைகொள்ளும் பகை விரட்ட
பாலனே! பாட்டனே! எழுந்திடுவீர்
தாயகத்தைக் காத்திடும்
தமிழர் படை அணிக்குத்
தோள்கொடுப்போம்–தமிழர் சுதந்திர
நாள் குறிப்போம்.

**–ந. சந்திரகுமார், சுவிஸ்.**

எனக்கு என்று வாழ்ந்தது போதும்
எமக்கு என்று வாழ்வோம்.
நாம் ஊன்றியிருக்கும் தேசம் நிரந்தரம் அல்ல
எமக்கு என்று ஒரு நாடு உண்டு.
எம்நாட்டின் விடுதலைக்காய்
அனைத்துப் பலம் திரட்டித்
தோள்கொடுப்போம் – விரைவில்
தமிழீழம் காண்போம்.

**–எழுதுமட்டுவாள்**
**க.ம. சிறிரஞ்சன்,யேர்மனி.**

வாருங்கள் தோழர்களே
தோள்கொடுப்போம்
பாருங்கள் நமது நாட்டின்
பரிதாப உறவுகளை,
தாருங்கள் உங்கள்
யாவரதும் பங்களிப்பை,
காணுங்கள் தமிழீழம்
நாளை எங்கள் கையில்.

**–திருமதி விஜயநாதன், யேர்மனி.**

ஐம்பது ஆண்டுகாலம் இனவெறியால்
அடிமையான எம்மின விடுதலைக்கு வித்திட்டு
தன்மானம் தமிழர் சொத்து,
தனிஆட்சி நிரந்தரவிடிவு என–
சிங்களப்படை சிதறிநிலை கெட்டோட
படைநடத்துமெங்கள் காவியநாயகன்
தலைமைக்கு ஒருமுகமாய் தோள்கொடுத்து
மீட்போம் வீரமிகு தமிழ்மண்ணை.

**–சு. உதயபாரதிலிங்கம், சுவிஸ்.**

தமிழ் ஆண்ட பழங்காலம் திரும்பவேண்டும்
தமிழ் மக்கள் தம்நாட்டை மீட்க வேண்டும்
உமிழ்கின்ற தீப்பிழம்பில் உடன்பிறப்பு நமக்காக
உயிர்பொசுக்கிப் போரில் நிற்க
எமக்கிதுவும் ஒரு வாழ்வா எனநினைத்து
எம்கடன்எது? எவ்வண் செய்வதென
எமதுள்ளம் சிலிர்க்க நாம் நிமிர்ந்துநிற்போம்
தமிழீழ விடிவினுக்குத் தோள்கொடுப்போம்.

**–எழிலன், யேர்மனி.**

மண்ணுக்காக மரணங்கள்
மலிந்த மண்ணில்
மானம் காக்க நம் மக்களும்–
அடைமழையாய் கொட்டும்
அரச பயங்கரவாதத்தில்......!
சிறுத்தைகளாய் விதைபட்ட
வீரர்களின் எண்ணங்கள் முடிசூட–நாமும்
தமிழீழப் போர் வெல்ல தோள் கொடுப்போம்.

**–அல்லையூர் சி. விஜயன், இத்தாலி.**

தாள் பணியாத் தமிழர்படை
தழைத் தோங்கத் தோள்கொடுப்போம்.
ஆழிகடந்து அரும்பாடுபட்டு
ஊழித்துயர் பட்டுநிற்கும் எம்மவர்க்கு–
ஈழமே நாதமென்ற எம்படைக்கு–
பளபளக்கும் புலிக்கொடி ஈழத்திலே பறந்திட–
கோழைகளாய் அலைந்தது போதுமினி
தமிழரெல்லாம் ஒன்றாகித் தோள்கொடுப்போம்.

**–புங்குடுதீவு ரூபாஷனி**
**பாலசுப்பிரமணியம், யேர்மனி.**

**ஆக்கங்கள் அபிப்பிராயங்கள் அனுப்பியோர் அனைவருக்கும் நன்றி!**

பெண் உருவத்துள் பேய்புகுந்து தமிழரை
ஆட்டி வைக்கும் காலமிது
எத்தனை உயிர்ப்பலிகள் கொடுத்திட்டோம்
எமது தாயகத்தில் சுதந்திரக்காற்று
வீசிடும்வரை சளைத்திடோம்
தோள்கொடுப்போம்.

**–ரவீந்திரராஜா ஷந்தியா**

காலம் நமக்கிட்ட கட்டளை இது!
எம் சந்ததி காக்க
நாம் செய்யவேண்டிய காப்புறுதியும் இதுதான்!
தவிர....எதற்காக எங்கள் மாவீரர்கள்
இம்மண்ணில் புதைந்தார்களோ
அதற்காகவேனும் நாம் இன்று.
தோள்கொடுப்போம் வாரீர்!

**–துறையூரான், சவூதி அரேபியா.**

ஊரைவிட்டோடுவதும் –நம்
உயிருக்குப் பயந்து ஒதுங்குவதும்
கோழையின் செயலன்றோ–உறவுகளே
எங்கள் உயிர் அழிந்தாலும்
இனிவரும் உயிர்கள் வாழ
இன்றே சிந்தித்து நிமிர்ந்து–எம்
சேனைக்குத் தோள்கொடுப்போம்
தமிழ் ஈழம் வென்றெடுக்க.

**–புங்கைநகர் மு. ரா. சர்வா, ஜேர்மனி.**

சீராட்டிப் பாராட்டி
வளர்த்தெடுத்த செல்வங்களை
செந்நீராறாய் ஓடவைத்த
சந்திரிகாவின் செயலை
யாராகிலும் பொறுப்பாரோ–அணி
சேராத தமிழனுண்டோ?
நீருமின்றித் தவிக்கு மெங்கள்
தேசமக்களுக்கு தோள்கொடுப்போம்.

**–வித்யாராம், யேர்மனி.**

ஆயிரமாயிரம் உயிர்ப்பலிகள்–இதுவே
எமது கதி – எமது விதி என வாழாதீர்!
எமது தேசம், எமது மக்கள் என
அறை கூவிடுவீர்! வரிப்புலி வேங்கையர்
அலைஅலையாய் பாய்ந்திடும் களத்தில்
உரமுடன், உணர்வுடன் உறுதியாய்
"எம்தலைவனுக்குத் தோள்கொடுப்போம்" –என
வாரீர்! தமிழரே எழுந்துவாரீர்!

**–செல்வன். ச. மயூரன், லண்டன்.**

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

ஈராக்- அமெரிக்க நெருக்கடியில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கோபி அனான் அவர்கள் ஈராக்குக்கு விஜயம் செய்து ஒப்பந்தம் ஒன்று செய்தமையை நாம் அனைவரும் அறிவோம். இது குறித்து ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் CNN தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் ''வலிமையைக் காண்பித்துக் கொண்டு அதை பயன்படுத்தாமல் இருப்பவனே சிறந்த அமைதி உருவாக்கி'' எனக் கூறியமை நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம்.

வலிமை. அதுதான் அமைதியான பாதுகாப்பான வாழ்வு ஒன்றை மக்கள் சமுதாயம் பெறுவதற்கு அடிப்படையாக இருக்கவேண்டிய தேவை. ஒரு மக்கள் சமுதாயம் காலனித்துவத்திற்கு உட்படும் பொழுது. இந்த வலிமை என்பதை அகற்றி அந்தச் சமுதாயத்தை ஒரு தங்கி வாழும் சமூகமாக மாற்றுவதிலேயே காலனித்துவ சக்தி தன் முழுக்கவனத்தையும் செலுத்தும். இதனால் காலனித்துவ ஆட்சிகளுக்கு உட்பட்ட சமுதாயங்கள் உரிமைகளை அல்ல சலுகைகளை நம்பி வாழும் சமூகமாக மாறிவிடும்.

நமது தமிழீழச் சமுதாயத்துக்கும் இது பொருந்தும். 1621 முதல் 1948 வரை 327 வருடங்கள் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டதன் விளைவாக உரிமைகளைக் கூட சலுகைகளாக கேட்கும் ஒரு போக்கு எமது தமிழ்ச் சமூகத்தின் வழமையாகி மிஞ்சும் மனிதரிடம் கெஞ்சும் வரலாறாக எமது வரலாறு காட்சியளிக்கிறது. இந்த அடிமைத்தனத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய காலனித்துவம் உருவாக்கிய சிங்களப் பெரும்பான்மை அரசு தன்னை எஜமானாகவும் தமிழர்களை அடிமைகளாகவும் கருதி செயற்பட்டமையே இன்றைய சூழ்நிலைகளுக்கு காரணிகளாகியது.

சந்திரிகாவின் தந்தை பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்ததின் பின்னர் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தப்போன தமிழரசுக் கட்சியினரிடம் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா. ''தாம் கூட்டாட்சிக்கான அரசியல் அமைப்பு மாற்றங்கள் குறித்தோ அல்லது சிங்களம் மட்டும் சட்டத்தைக் குறித்தோ பேசமுடியாது'' எனத்திட்டவட்டமாகக் கூறியபொழுது. ''தமிழரசுக்கட்சியினர் தங்களது அடிப்படைக் கொள்கைகளிலிருந்து விலகிப் போகாமல் அல்லது சரணாகதியடையாமல் இணங்கி வாழ்வதற்குரிய வழிகள் ஏதாவது உண்டா'' என பண்டாரநாயக்காவிடம் பரிதாபமாகக் கேட்டனர். அப்பொழுது எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா உவந்தளித்த சிங்களப் பேரினவாதத் தீர்வுதான் 'பிரதேச சபைகள்' எனும் சிங்கள ஆட்சியின் அதிகார பரவலாக்கலுக்கான ஆலோசனை. அதனைக் கூட சிங்கள பௌத்த பேரினவாதிகள் அனுமதிக்கவில்லை என்பது வரலாறு. ஆனாலும் அன்று முதல் இன்று வரை. பண்டாரநாயக்கா குடும்பம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என உலகை ஏமாற்றுவதற்கு இந்த 'அதிகாரப் பரவலாக்கம்' எனும் தீர்வுப் பொதியைச் சுமந்து கொண்டு திரிகிறது. ஆக தமிழர்கள் வலிமையற்றவர்களாக. உதைத்த காலையே உதவிக்காலாக கட்டி அணைத்த பொழுது பிறந்ததுதான் இந்த அதிகாரப் பரவலாக்கல் எனும் சிங்கள உத்தி. அதனால்தான் இன்றும் சந்திரிகா தமிழர்களை. தீர்வுப் பொதி சுமக்கும் கழுதைகளாக நினைத்து தனது இராணுவ சர்வாதிகார எஜமான்களைக் கொண்டு தீர்வுப் பொதியை அவர்கள் தோளில் சுமத்த பகற்கனவு காண்கிறார்.

ஆனால். தமிழர்கள் இன்று நேற்று மாதிரி வலிமையற்றவர்கள் அல்ல என்ற உண்மையைச் சந்திரிகா மனங்கொள்ளத் தவறுவதே அவர் செய்யும் மாபெரும் தவறு என்று. தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் தமிழீழத் தேசிய பாதுகாப்புக்கான தமிழீழ மக்கள் இராணுவம் தோன்றியதோ அன்றே தமிழர்கள் வலிமையுள்ள தேசஇனமாக(Nation). தமிழீழ மக்கள் எனும் தனியான மக்களாக(People). தமது சுயநிர்ணய உரிமை கொண்டு தமது வரலாற்றுத் தாயகமாம் தமிழீழத் தேசத்தை மீள அமைப்பதற்கான சர்வதேசச் சட்டங்களுக்கு அமைவான தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை நடாத்திக் கொண்டு இருக்கின்றனர்.

இந்தப் போராட்டம். பேரம் பேசும் அரசியல் அல்ல. மக்கள் உயிர்களினாலும் உடல்களினாலும் மீளவும் கட்டி எழுப்பப்பட்டுள்ள தமிழீழத் தேசத்தை சுதந்திர நாடாக உலகசபையில் உட்கார வைப்பதற்கான தமிழீழ மக்களின் தியாக வேள்வி. ஆனாலும் தமிழீழ மக்களிடை குவிக்கப்பட்டு அவர்களின் நாளாந்த வாழ்வுக்கும் உயிருக்கும் உடமைகளுக்கும் அச்சுறுத்தலை விளைவிக்கும் சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகள் விலக்கப்பட்டு. தமிழர் தாயக உரிமை ஏற்கப்பட்டு முன்வைக்கப்படக்கூடிய. மூன்றாவது நாடு ஒன்றின் மத்தியத்தினை தமிழர்கள் ஒருபோதும் எதிர்க்கவில்லை. ஆகவே ஈராக் மேல் அக்கறை காட்டியது போல். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் கோபி அனான் அவர்கள் தமிழீழ மக்கள் மேலும் அக்கறை காட்ட வேண்டும். தமிழீழத்தின் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் நேரடித் தொடர்புகளை மேற்கொள்வதே தமிழீழ மக்களின் உண்மைநிலைகளைத் தெரிந்து ஏற்ற நடவடிக்கைகள் எடுக்க உதவும்.

ஒரு தேச இனம் வலிமையுடன் இருந்தாலே. அந்த தேச இனத்தால் திறமையான முறையில் தனக்கான அமைதி உருவாக்கலைச் செய்யமுடியும். இந்த வலிமையை பயங்கரவாதம் எனக் கொச்சைப்படுத்தி தனது பகிரங்க இனக்கொலைகளை. இனவதைகளை நியாயப்படுத்த முயலும் அரச பயங்கரவாதத்தை இனங்காண வேண்டிய பொறுப்பு ஐக்கிய நாடுகள் சபைக்கு உண்டு.

ஈராக்குக்கு விஜயம் செய்ததன் பின் அளித்த பேட்டியில். ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசைனை ஈராக்கிய மக்களின் தேசியத் தலைவன் எனத் தெளிவாகக் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணம். நேரடியாகக் காணும் பொழுது பல தெளிவுகள் பிறக்கும் என்பதேயாகும்.

அவ்வாறே எங்கள் தமிழீழ மண்ணுக்கும் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் சென்று பார்ப்பாரானால் பல உண்மைகள் விளங்கும். ஸ்ரீலங்காவின் பொய்மைகள் விலகும். அது மட்டுமல்ல. மீள உருவாகி நிற்கும் தமிழீழத் தேசத்தை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரிக்கத் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் அதனை அழிப்பதற்கு என சிறீலங்கா அப்பாவித் தமிழ் மக்களை கொன்றழித்துக் கொண்டிருக்கிறது என்ற உண்மை உணரப்படும். இதனால் அப்பாவித் தமிழீழ மக்களின் அழிவுகளுக்கு சர்வதேச அமைப்புகளதும் சர்வதேச சமூகத்தினதும் அவட்சியமும் ஒரு காரணியாக இருந்தது என நாளைய வரலாறு கூறப்போவதும் புலனாகும்.ஆனால். எமது தமிழீழப் பிரச்சினையில் சர்வதேச சமூகம் எவ்விதம் சிறீலங்கா அரசாங்கத்தின் இறைமையை மீறித் தலையிடலாம் என்ற பொதுவான கேள்வியுண்டு. இங்குதான்.

அன்புச் சகோதரமே! என்னுடைய பங்களிப்பும் உன்னுடைய பங்களிப்பும் முக்கியத்துவம் பெறுகிறது. ஒரு அரசாங்கம் தன்னுடைய குடிகள் எனக்கூறிக் கொள்பவர்களுக்கு அமைதியையும் பாதுகாப்பையும் வழங்க ஆற்றலற்றுக் காணப்படும் பொழுது ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச அமைப்புக்களும் அவ்வரசாங்கத்தின் இறைமையை மீறி. தலையிடலாம் என்பது சர்வதேச நியதி.

ஆகவே நானும் நீயும்தான். அந்நிய அரசான சிறீலங்கா அரசாங்கம் மட்டுமல்ல முன்னைய சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களும் காலனித்துவம் விலகிய நாள் முதலாக கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தமிழர்களுக்கு பாதுகாப்பையும் அமைதியையும் அளிக்கும் ஆற்றலற்றதாக மட்டுமல்ல. அக்கறையற்றதாகவும் இருந்து வருகிறது என்பதை சர்வதேச உலகுக்கு எடுத்து விளக்கும் சான்றுகளாதல் வேண்டும். நாம் தனியான மக்கள் இனம். நிலையான தேசஇனம். தமிழீழம் எனும் வரலாற்றுத் தாயகத்தில் வாழ்ந்து வருபவர்கள் என்பதை எமது வாழ்வால் பிரதிபலிக்க வேண்டும்.

நாம் கிடுகுவேலியில் ஓட்டை போட்டு அதனூடாக உலகைப் பார்த்தவர்கள். அதனால்தான் பங்காளர் ஆவதற்குத் தயங்கி பார்வையாளர்களாகவே என்றும் வாழ முயல்கிறோம் என. எங்களின் பிரபல கல்விமான் ஒருவர் பொது மேடை ஒன்றில் கூறினார். உண்மைதான். படிப்பது உயர் தொழில் பெற. உயர் தொழில் பெறுவது சிறப்பாகத் திருமணம் செய்ய - திருமணம் செய்து சீருடன் வாழ்ந்து. பெருமைகள் பேசி. செருக்குடன் சாவதே பெருவாழ்வு - முத்திக்கு கோயில் குளம் சுற்றி வந்தால் போதும் என்பதே நம் வாழ்வாக்கி விட்டவர்கள் நாங்கள். அதனால் அவர்கள் போராடி உயிர் வாடி உடலுருகித் தமிழீழம் அமைக்கட்டும். ஓடோடி அங்கு சென்று தேடிய பொருள் குவிந்து. நாடியவாறு நம்நாடு என வாழலாம். அது வரை ஸ்ரீலங்காவுடன் முரண்படாது சமார்த்தியமாய் வாழ்ந்திட்டால் வியாபாரம். உல்லாசம். கல்யாணம். செத்தவீடு. பழைய ஊர் பார்க்க என அங்கேயும் போய் வரலாம் என்று எண்ணுபவரும் நம்மில் உண்டு. ஆனாலும். எமக்கெல்லாம் சேர்த்து தம் இன்னுயிரையே ஆயுதமாக்கிப் போராடும் அத்தியாகக் காட்சிகள் எம் மனச்சாட்சியை. எம் இன உணர்வை உசுப்புகின்றன. உயிரைக் கொடுக்காவிட்டாலும். உடலைத் தேய்க்கா விட்டாலும் உழைப்பில் பகிர்வோம். உள்ளதில் கொடுப்போம். குரலாய் ஒலிப்போம். சான்றுகளுடன் உண்மைகள் உரைப்போம். இவையும் இல்லையேல் நாம் தமிழருமல்ல - மனிதருமல்ல.

அன்பின் - ஆசிரியர்.

# சிறீலங்காவின் மேலாண்மையில்......

அசுர முன்னேற்றத்தை அடைந்துள்ளோம்." ஜனாதிபதியின் இந்தப் பேச்சு சிங்களவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதும், அது தமிழ் மக்களைப் பொறுத்தளவில் கொஞ்சமும் பொருந்தாது என்பதும், சந்திரிகா குறிப்பிடும் "பெரும்பான்மை மக்கள்" சிங்களவர்களை மனதில் வைத்து, சிங்களவர்களுக்காக மட்டும் சொல்லப்பட்ட வார்த்தைகள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை என்பது தெளிவாகும். தமிழர்களைப் பொறுத்தளவில் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் கொடூர அடக்குமுறையால் அவர்களது வாழ்க்கைத்தரம் அதல பாதாளத்துக்கு தள்ளப்பட்டுள்ளது என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது.

பண்பாட்டுத்துறையில் மறுமலர்ச்சிக்குப் பதில் பண்பாட்டுச் சிதைவு ஏற்பட்டுள்ளது. கல்வி, உடல்நலம், பண்பாடு மற்றும் கலைகள், சட்டம், தொழில் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி இவை போன்ற துறைகளில் பெரும்பான்மை சிங்களவர்கள் அசுர முன்னேற்றத்தைக் கண்டுள்ளபோது தமிழ் மக்கள் ஏறத்தாள கற்காலத்துக்கு பின்னோக்கித் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி சந்திரிகா கொஞ்சம் பரவாயில்லை என்று சொல்லுமாப்போல் அமைந்துள்ளது. பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சுதந்திரதினச் செய்தி:

"It was the social transformation that Mr. Bandaranaike brought about in 1956 that caused a meaningful awakening of the freedom gained in 1948. Subsequently in 1972 during my period of office when Sri Lanka was declared a 'a Free and Sovereign Republic' any othe remaining bondages that may have been left in relation to othe foreign countries were cast off entirely"

"1948இல் கிடைத்த சுதந்திரதினத்தின் சரியான அர்த்தம் திரு. பண்டாரநாயக்காவினால் 1956இல் கொண்டுவரப்பட்ட சமூக மாற்றத்தினாலேயே ஏற்பட்டது. அதன்பின் 1972இல் எனது ஆட்சிக்காலத்தில் சிறீலங்கா "சுயாதீன இறைமை படைத்த குடியரசாக" பிரகடனப்படுத்தப்பட்டு எஞ்சியிருந்த பிற நாடுகளுடனான, அடிமைத்தளைகளும் முழுதாக வெட்டப்பட்டன. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கூற்று சிங்களவர்களைப் பொறுத்தளவில் நூற்றுக்கு நூறு உண்மையானது. ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தளவில் நூற்றுக்கு நூறு பொய்யானது. 1956இல் பண்டாரநாயக்காவினால் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட "சிங்களம் மட்டும் சட்டம்" தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான மொழியுரிமைக்கு வேட்டு வைத்தது. 1972இல் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட புதிய குடியரசு யாப்பு சோல்பரி அரசியல் திட்டத்தில் சிறுபான்மை மக்களுக்குக் கொடுக்கப்பட்ட கொஞ்ச நஞ்சப்பட்ட பாதுகாப்பையும் இல்லாது ஒழித்தது. அதுவும் சோஷலிசத்தின் பெயரில், இந்த ஜனநாயகப் படுகொலை நடாத்தி முடிக்கப்பட்டது. எனவே, இந்த உரைகள் மூலம் ஜனாதிபதி சந்திரிகா சரி, பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா சரி இருவருமே தங்களைச் சிங்களவர்களது ஜனாதிபதியாகவும் சிங்களவர்களது பிரதமராகவுமே காட்டிக் கொள்கிறார்கள். இதில் எந்த மறைப்பும் இல்லை. ஒளிப்பும் இல்லை. இன்றைய அரசியல் யதார்த்தமும் இதுதான். தமிழ் மக்களும் – சிங்கள மக்களும், தமிழீழமும் – சிறீலங்காவும் இலங்கைத் தீவில் இரு துருவங்களாக காட்சியளிக்கின்றன. "சிங்களவர்களுக்கு வெண்ணெயாக இருப்பது, தமிழ் மக்களுக்கு சுண்ணாம்பாக இருக்கிறது. சிங்களவர்களுக்கு நன்மையாக இருப்பது, தமிழ் மக்களுக்கு தீமையாக இருக்கிறது. சிங்களவர்களுக்கு பொன்னான நாளாக இருப்பது, தமிழ் மக்களுக்கு கரிநாளாக இருக்கிறது."

சிறீலங்காவில் கொண்டாடப்பட்ட பொன்விழாவில் தன்மானத்தைத் தொலைத்துவிட்ட தமிழ் கைகூலிகளைக்கூட, கலந்து கொள்ள வைக்க சந்திரிகா அரசினால் முடியவில்லை என்பதை, "சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் கடைசிவரை ஒட்டாது" என்பதை சுதந்திரப் பொன்விழாக் கொண் டாட்டம் மீண்டும் தெட்டத் தெளிவாக நிரூபித்துக் காட்டி விட்டது. தமிழ் மக்களைப் பொறுத்தளவில் தமிழீழம் சிறீலங்காவின் மேலாண்மையிலிருந்தும், அடக்குமுறை ஆட்சியிலிருந்தும் விடுதலை பெறும் நாளே சுதந்திரப் பொன்நாளாகும். பெப்ரவரி 4 படித்துத்தரும் அரசியல் பாலபாடம் இதுவே. ✳

ஒரு நாட்டின் சுதந்திரம் என்பது, எல்லோருக்கும் சொந்தமாக இருக்க வேண்டும். எல்லாக் குடிமக்களும் சுதந்திரத்தின் பயனை ஒரு சேர அனுபவிக்க வேண்டும்.

www.tamilarangam.net



# காற்றுக்குப் பொன்னாடை முகில்களுக்கு மூக்குத்தி ஒப்பனையின்ஒய்யாரம் வெகுநேர்த்தி

*வேணிச்சங்கரர் தொண்டர்களென்று*
*வீடுதோறும் இரப்பவர்க் கெல்லாம்*
*மாணிக்கமள்ளிப் பிச்சைகொடுத்திடும்*
*மாவலிகங்கை நாடெங்கள் நாடே.*

*துஞ்சுமேதி சுறாக்களைச் சீற*
*சுறாக்களோடிப் பலாக்கனி கீறியே*
*இஞ்சிவேலியில் மஞ்சளிற் போய்விழும்*
*ஈழமண்டல நாடெங்கள் நாடே.*

இப்படித்தான் எத்தனை வடிவாய்
ஈழத்தமிழ்ப் புலவோர்கள் இலங்கையைப் பாடினர்.
சிங்களக் கவிகளே சொல்லாத அழகாய்
செந்தமிழ்ப் புலவர்கள் செப்பினர்.
எல்லாம் கனவாய்,
எல்லாமே கற்பனையாய்,
மெல்ல, மெல்லக்கரைந்து முழுதும் தொலைந்தது காண்.
சிங்கமணித் தீவுக்கு
4-2-98 அன்று
தங்கமணித் திருவிழா.
வெள்ளைக்காரனிடமிருந்து விடுதலைபெற்று
அன்று ஐம்பது வருடங்கள் ஆகிறதாம்.
பொன்விழாப் பூரிப்பில் "லங்கா" பூத்துக்கிடக்கிறதாம்.
காலில்மாட்டிய விலங்குகள் கழண்டு
சிங்கபுரி பாலிற்குளித்த நாள்.
தோளிற்பூட்டிய நுகத்தடி முறிந்து
"நாயக்க வம்சம்" நிமிர்ந்து நடந்த நாள்.
தொண்டுசெய்திருந்த தொலைதூரத்தை விட்டு விட்டு
கண்டி உயர்மலைகளின் கால்களில்
சிங்களதேசம் சேவித்துக் கொண்டநாள்.
வெள்ளைக்காரன் காலத்துப் பல்லக்கு
விடுதலைக்குப் பின்னர் ஆடம்பரக்காரனென்றாச்சு.
அவ்வளவுதான்.
வெள்ளைக் கொக்குகளிடமிருந்து
ஆட்சியதிகாரம்
கறுப்புக் காகங்களிடம் கைமாறியது.
அவர்களிடமிருந்த எல்லாமே
இவர்களுக்கென்றாச்சு.
அவ்வளவுதான்.
தந்தைக்குப் பின் மைந்தன் ;
புருஷனுக்குப் பின் மனைவி ;
தாய்க்குப்பின் மகளென்றும் ;
இடைக்கிடை சண்டியர்களுக்கெனவும்
மாங்கனித்தீவு ஏலம் போனது.
போராடாமற் கிடைத்த சுதந்திரமென்பதால்
சிங்களதேசமும் பேசாமற் கிடக்கிறது.
வேருக்கு நீரில்லையென்றாலும்
பேருக்காவது சுதந்திரம் கிடைத்ததேயென்று
சிங்கபுரி தோள்களைச் சிலிர்த்துக் கொண்டது.
தமிழர் தேசத்துக்குத்தான் "சாக்குரல்" பரிசாச்சு.
இறைமைகள் வெவ்வேறான இரண்டு தேசங்களின்
எல்லைகள் வெட்டப்பட்டு
ஒன்றாக்கப்பட்டது.
போகும் போதாகிலும் பிரித்துத் தந்திருக்கலாம்.
அவர்களும் பேசாமற் போய்விட்டனர்.
நாயக்க வம்சத்திற்கு நாடாகிவிட்டது.
இன்றதற்குப் பொன்விழாவாம்.
கண்டிமலைகளின் கழுத்தில் மாலைகட்டப்படுகிறது.
கங்கைகளின் கால்களில் சதங்கை பூட்டப்படுகிறது.
காற்றுக்குப் பொன்னாடையும்
முகில்களுக்கு மூக்குத்தியும் வழங்கப்படுகிறதாம்.
ஒப்பனைகளின் ஒய்யாரம் வெகுநேர்த்தி.
விடுதலைபெற்ற இரண்டு விழிகளில்....
ஒன்றுக்கு மைதீட்டப்படுகிறது.
மற்றக் கண்ணுக்கு மண்ணெண்ணை ஊற்றப்படுகிறது.
இலங்கையின் பொன்விழாவே இதுதான்.
பன்றிகளைக் கூட்டிலடைப்பது போல
தமிழர்களை "கோழிக்கூட்டில்" அடைத்துவிட்டு ;
உரத்துப்பேசும் உரிமையையும் ;
நிமிர்ந்து நடக்கும் இறைமையையும் ;
தமிழருக்கு இல்லாதழித்துவிட்டு
தன் சொந்த ஊரிலேயே நடந்து செல்லும்
சுதந்திரத்தையும் பறித்துவிட்டு ;
கண்டியில் பொன்விழாவாம்.
வன்னியில் காட்டுவாசிகளாகிவிட்ட தமிழருக்கு
உண்ணும் அரிசியைத்தானும் ஒழுங்காய் அனுப்பாது
பட்டினிச்சாவுடன் பரிதவிக்க விட்டுவிட்டு
சுதந்திரப் பொன்விழாவாம்.
விடுதலையென்ன வென்றறியாது வாழும் தமிழனுக்கு
பொன்விழா என்ன ? புதுவிழா என்ன?
தமிழனை அடக்கியாளும் சிம்மாசனத்துக்கு
சிங்கள இனம் மாறி, மாறி மன்னரை அனுப்பும்.
இப்போது சந்திரிகாவின் முறை.
பொன்விழாவுக்குப் பொருத்தமானவரின் கையில்
கண்டி நகரம் களைகட்டுகிறது.
சந்திரிகா தலதாமாளிகைக்கு –
தங்கமுலாம் பூசுகின்றார்.
மாமன் கண்டிவீதி போடுவதற்கு
மண்ணும் கல்லும் பறிக்கின்றார்.




**- வியாசன்**

வேடிக்கையான கூட்டமடா.
"ஹெரகொல்லை" வேர்களுக்கு...
திமிரடங்காச் செருக்கு இன்றும்தான்.
குடாநாட்டில் தேர்தலை நடத்திவிட்டு
"கும்பிடு பூச்சிகளைக்" கண்டிக்கழைத்துச் சென்று
"இலங்கைத் தேசியம்" மீண்டுமெழுந்ததென்று
முழங்கப் போகின்றனர்.
வடக்கும், கிழக்கும் தெற்குடன் இணைந்ததென்று
கண்டியின் எண்கோண மண்டபத்தில்
"ஓர்க்கிட்" மலர்களிடையேயிருந்து
சந்திரிகா "சபதம் நிறைவேற்றுவார்."
அத்துடன் அடுத்த தேர்தலுக்கு ஆயத்தமாகும் நாடு.
இதுதான் பொன்விழா.
இதற்குத்தான் இந்தவிழா.
குடாநாட்டுத் திருவிழாவில் சதிராடிவிட்டு
விமானமேறி விருந்துக்குப் போகப்போறவர்களே!
வன்னியில் குண்டெறிபவனை மன்னித்து
கொழும்பில் குத்துவிளக்கேற்ற அழைப்பவர்களே!
முற்றாகத் தமிழனை அழிக்கும்வரை
சிங்களத்துக்கு முண்டுகொடுக்கப் போகும் சீமான்களே!
வெக்கம், ரோஷம் பார்த்தால்
உங்கள் இலக்கை அடையமுடியாது.
விட்டுத்தள்ளுங்கள்.
பொன்விழா நேரத்தில் புகுந்துவிளையாடுங்கள்.
தமிழனே!
உன்னைப்போல் பாவம்செய்த ஜென்மம்
உலகத்திற் கிடையாது.
கண்களைத் திறக்காதிருக்கக் கடவது.
இந்தக் காட்சிகளை எப்படிக் காண்பது?
கலங்காதிரு தமிழா!
வன்னிமண் வரலாறுணர்த்தும்.
வீரம் நிமிர்ந்து விளையாடும்.
இது: பெறாத விடுதலையின் பொன்விழா.
நாங்கள் பெற்ற விடுதலையின் வெற்றிவிழா நடத்துவோம்
நாளை.

**– வியாசன்**